விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை (04.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கடும் காற்றுடன் மழை பெய்யும்!

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் பருவப்பெயர்ச்சிக்காற்று காலநிலை வலுவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பல பாகங்களில் மாலை மற்றும் இரவு நேரங்களில் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்யும் என திணைக்களத்தின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மனிதவுரிமை சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தத்தவறும் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரக் (23ஆம் பக்கம் பார்க்க)

## 40 ஆயிரம் பேர் வன்னியில் உயிரிழப்பு

# அரசாங்கத்திடமிருந்து உடனடியாக அறிக்கை கோருகிறார் தருஸ்மன்!

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின் போது கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 40 ஆயிரம் பேர் தொடர்பில் விளக்கமளிக்கப்பட வேண்டும் என இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் தலைவரும் இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபருமான மர்சுகி தருஸ்மன் வலியுறுத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் விவகாரம் அரசின் மீது சந்தேகமே!

### சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான கண்டனத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று ஃப்ரீ மார்ச் என்ற சட்டத்தரணிகளின் அமைப்பொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருக்கின்றமை, அந்த விசாரணைகள் தொடர்பில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதியரசருக்கு (23ஆம் பக்கம் பார்க்க)

## திவிநெகுமவை சட்டமாக்க வாக்கெடுப்பு நடத்தத் தயார்

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்நீதிமன்றம் அறிவுறுத்துமாயின் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக வேனும் திவிநெகும சட்டமூலத்தை சட்டமாக்குவோம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

வட மாகாண சபை இல்லாத நிலையில் வட மாகாண (23ஆம் பக்கம் பார்க்க)



## 13ஆவது திருத்தச்சட்டம் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்!

### இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். 13-வது திருத்தச்சட்டத்தை ஒழிப்பதை இந்தியா ஒரு போதும் விரும்பவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்து சமுத்திர வலய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13-வது திருத்தச்சட்டத்தை ஒழிக்க வேண்டுமென இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்றும் அது தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன வென்றும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். (23ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கடத்தப்பட்ட செல்வம் அடைக்கலநாதனின் உறவினர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அத்துடன் சந்தேகநபர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நானுஓயா பிரதேசத்தில் மீட்கப்பட்ட சடலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் உறவினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நானுஓயா (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் மோசடிகளை அரசு செய்து வருகிறது

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியில், ப்ளஸ் மைனஸ் ஆகி கடைசியில் பூஜ்யம் ஆன கதையே நடக்கின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஒரு அரசியல் மோசடியாகும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, புலிகளைத் தோற்கடிக்க உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் அவசரத்தில், ஜனாதிபதி மகிந்த (23ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரைச் சந்திக்க சட்டத்தரணிகள் தீர்மானம்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவைச் சந்தித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில், தற்போதைய நிலைமைகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் சபாநாயகரிடம் விவாதிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்தச்சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கித் தரு மாறு கோரி சபாநாயகருக்கு கடிதம் மூலம் வேண்டுகோளொன்றையும் முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள மேற்படி சங்கம், சபாநாயகருடனான (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவத்துக்கு காணி வழங்குதல் தொடர்பில் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை

## உதயன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இராணுவத்தினர் கோரிய 550 பரப்பு காணியை அவர்களிடம் கொடுப்பது தொடர்பாக இது வரை எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேத்திரி அலன்ரின் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய்பிரதேசசெயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் போது பிரதேச செயலரினால் இராணுவத்தினர் தம்மிடம் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ள காணிகள் தொடர்பான விபரத்தினை கூட்டத்தில் சமர்ப்பித்து சபையின் அனுமதியை கோரியிருந்தார்.

இராணுவத்தினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட குறித்த காணிகள் தொடர்பில் அப்பகுதி மக்களின் விருப்பத்தினை அறியாது எந்தவித முடிவும் எடுக்க முடியாது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அத்தோடு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கே இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளதெனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் குறித்த காணிகள் இராணுவத்தினர்க்கு வழங்குவதற்கு கூட்டத்தில் முடிபெடுக்கப்பட்டதோடு கூட்டத்தின் தலைவரும் ஒப்புக்கொண்டுள்ளார் என பிரதேச செயலர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் குறித்த காணி விவகாரம் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எந்தவிதமான அறிக்கையும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே பிரதேச செயலர் விடுத்த தகவலின் படி இராணுவத்தினர் கோரிய காணிகள் அவர்களிடம் வழங்கப்பட்டுவிட்டதா என ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப் பட்டபோதே அவர் மேற்ககண்டவாறு தெரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# இந்தியா செல்கிறார் கனடியப் பிரதமர்

இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பிக்கும் கனடியப் பிரதமர் ஹாப்பர் அங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தங்கியிருப்பதோடு பல்வேறுபட்ட சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

2009-ம் ஆண்டில் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட ஹாப்பர் அங்கே பல்வேறுபட்ட பொருளாதார முன்னேற்றப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இந்தியாவுடனான ஒரு நெருக்கமான உறவை கொண்டு வந்திருந்தார்.

அதுபோலவே இந்தமுறை விஜயத்திலும் சக்திவலு மற்றும் அணுசக்தி தொடர்பான பரஸ்பர பரிமாறல்களை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டே இப்பயணம் அமைகிறது என்றாலும் தீபாவளி கொண்டாட்ட நேரத்தில் செல்லும் கனடியப் பிரதமர் அவ்வாறான சமய, சமூக நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார் என்று தெரியவருகின்றது.

இதேவேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடனான சந்திப்பின் போது கனடியப் பிரதமர் இலங்கையில் இடம்பெற உள்ள பொநலவாய மாநாடு தொடர்பாகவும் கருத்து பரிமாறப்படலாம் எனத் தெரியவருகிறது. (எ-11)

# உயர் தேசிய பட்டதாரிகள் மீது புலனாய்வுத்துறையினர் விசாரணை

## காரணம் தெரியாமல் முழிக்கும் பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

உயர்தேசிய முகாமைத்துவ மற்றும் கணக்கியல் பட்டதாரிகள் சிலர் பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பட்டதாரிகளின் தொலைபேசிகளுக்கு தொடர்பு கொண்டு, முகவரியை கேட்டறிந்து கொண்டு, அவர்களின் வீடுகளிற்கு சென்ற புலனாய்வுத்துறையினர், தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின்போது உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளுக்கு டிசெம்பர் மாதம் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அதற்கு முன்னர் பொலிஸ் கிளியரன்ஸ் எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தே இவ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிவில் உடையில் செல்லும் அவர்களில் ஒருவர் தமிழ் பேசுவதாகவும் மற்றையவர்கள் சிங்கள மொழி பேசுவதாகவும் கூறப்பட்டது.

பட்டதாரிகள் மீது பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக, பட்டதாரிகள் எவ்வித விசாரணைகளோ பொலிஸ் கிளியரன்ஸ்களோ எடுக்காது பட்டதாரி பயிலுநராக பணியாற்றி வரும் நிலையில் தாம் மட்டும் ஏன் விசாரணை செய்யப்படுகின்றோம் என டிப்ளோமா பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உரிய அதிகாரிகள் தெளிவுபடுத்தி பட்டதாரிகள் மத்தியில் உள்ள அச்ச நிலையை போக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை தமக்கு பயிலுநர் பட்டதாரி நியமனம் வழங்கப்பட வேண்டும் என உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் 228 பேர், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்துள்ளதுடன், அவ்வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 5-ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)


**7 நாட்களில் வீட்டு, நிறுவன மின் இணைப்பாளராக வேண்டுமா? (Wiring)**

- பயிற்சி முடிவில் சுயமாக தொழில் புரிவதற்கான உத்தரவாதத்துடன் நிறுவனங்களில் வேலை புரிவதற்கு சான்றிதழும் வழங்கப்படும்.
- வயதெல்லையின்றி அனைவரும் கலந்து கொள்ளமுடியும்.
- அதி உயர் வருமானம் ஈட்டும் துறையும், தொழில்நுட்ப பாடநெறியுமாகும்.

**IISEEES NALLUR CAMPUS**
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P. : 021 222 4728, 0777444225
e mail : Info@iiseees.lk
(C-1436)



**மலேசிய ஹொட்டேல் முகாமைத்துவ பயிற்சிநெறியில் மாணவர்கள் இணைவு**




(C-1438)

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி ஊடாக மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE திட்டத்தின் வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சிநெறியில் இணைந்த ஒரு தொகுதி மாணவர்கள், கோலாலம்பூர் SEGi University Training Centre இல் 22-10-2012 திங்களன்று தமது கற்கைநெறியை ஆரம்பித்தனர்.

இவர்களை நேரடியாக மலேசியா அழைத்துச்சென்று கற்கைநெறியில் இணைத்த சிகரம் பணிப்பாளர், மாணவர்களுக்கு அங்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாக மாணவர்களின் பெற்றோருக்கு 29-10-2012 அன்று சிகரம் விரிவுரை மண்டபத்தில் விளக்கமளித்தார்.



2ம் அணி மாணவர்கள் ஜனவரியில் பயணம்
விண்ணப்ப முடிவுத் திகதி: நொவெம்பர் 10

MEDIA & EDUCATION
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
சிகரம் கல்வி தொழில் வழிகாட்டி
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 021 300 80 60 Hotline: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk



**தேவை**
**Toyota Town A/C**
வாகனம்
வாடகைக்கு தேவை.
தொடர்பு 0777605106
0777718736
(883)



**'EASY ENGLISH'**
உத்தியோகத்தர்க்கு ✱ ஆசிரியர்க்கு ✱ உயர்கல்வியினர்க்கு ✱ A/L படித்தவர்க்கு ✱ மகளிர்க்கு ✱ வெளிநாடு செல்பவர்க்கு
ஸ்ரீவித்தியா குருகுலம்
"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."
குருகுல மரபு (i) கல்வி இலவசம்
(ii) விரும்புவோர், குருதட்சணை கொடுக்கலாம்
விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்
(840)



**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**




10.30
2.30
6.30
30.10.2012 முதல் A/C
ஆசிரியர், மாணவர்களுக்கு
விசேட சலுகைக் கட்டணம்
D.T.S



**ஐரோப்பிய நாடான சைப்பிரஸுக்கு Student Visa மிகக் குறைந்த கட்டணத்துடன்**

- 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
- மாதம் பகுதி நேரத் தொழில்வாய்ப்பின் மூலம் ரூபா ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்.

விசேட கட்டணச் சலுகைகளுடன்
சட்ட ஆலோசனை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

- புதன்கிழமை திறக்கப்படமாட்டாது.
- சனி, ஞாயிறு தினங்களில் திறந்திருக்கும்.
- தொலைபேசி மூலமான வியாபார விசாரணை இடம்பெறமாட்டாது.

(C-1439)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சவுந்தரம் (குமார் அம்மா)



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சவுந்தரம் அவர்கள் 01.11.2012 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தவமலர், தவக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சரஸ்வதி, தவமணி, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரியும், உலகேஸ்வரன்(ஈசன்), நவமணிதேவி(தேவி) ஆகியோரின் மாமியாரும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், கபிலன், சுதர்ஷன், கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.08, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 08, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மகன் - தவக்குமார்

(893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித உரிமையை யாராலும் தட்டிப் பறிக்க முடியாது

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மனிதனது உரிமை மீறப்படுகின்றபோது மீறப்பட்ட உரிமையை பெற்றுக் கொள்வதற்கும் தட்டிக் கேட்பதற்கும் உரிமையுண்டு என யாழ். மாவட்டஅரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவும் மாவட்ட செயலகமும் இணைந்து நல்லூர் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் தினப் பரிசளிப்பு விழாவை நடத்தின. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சமுதாயத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதனை நாம் அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.அந்த வகையில் எமது பிரதேசத்தில் எவ்வாறான வழிகளில் துஷ்பிரயோகம் நடைபெற்றுள்ளது என்பதை நாம் இணங்கண்டு அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு யாழில் இடம்பெறும் சிறுவர் தினங்களினால் உமது சிறுவர்கள் எவ்வளவு தூரம் விழிப்புணர்வு அடைந்துள்ளனர் என பார்க்கும் போது அதில் முன்னேற்றம் ஏற்பட்டுஉள்ளதினை அவதானிக்க முடிகின்றது.

தற்போது சிறுவர்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக அடிபணியாமல் அவற்றுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு துணிந்துள்ளனர்.சிறுவர்களுக்கு என்று உரிமை மற்றும் சுதந்திரம் உள்ளது.

நாம் அவர்கள் மீது எதனையும் திணிக்கமால் அவர்களை வாழ விட வேண்டும்.

தற்போது இளஞர்கள் மற்றும் முதியோர்களினால் இச்சிறுவர்கள் உலகம் பாதிப்படைகின்றது. எமது சமூகத்தை சேர்ந்த மனிதராக இருந்தாலும் அவனது உரிமை மீறப்படும் போது அதற்கெதிராக குரல் கொடுக்க உரிமையுண்டு.

இதனைத்தான் மனிதவுரிமை பட்டயத்தில் முதலாவது உறுப்புரிமை தெளிவுபடுத்துகின்றது.

உலகத்திலுள்ள அனைத்து சிறுவர்கள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபையும் எமது நாட்டிலுள்ள சிறுவர்களின் அபிவிருத்தி தொடர்பில் எமது அரசும் பல்வேறு நடவடிக்கை திட்டங்களினை மேற்கொண்டு வருகின்றது.

இன்றைய சிறுவர்கள் சரியாக வழி நடத்தப்பட்டால்தான் நாளைய சமுதாயம் வளம் மிக்கதாக அமையும் என்றார். (அ-4)

## வாரம் ஒரு தகவல்

### விலை மதிக்க முடியாத சொத்து

"ஒரு வயதான அமெரிக்க வாசியின் இறுதி விருப்பத்தை பதிவு செய்ய வேண்டியிருக்கிறது.உடனே புறப்பட்டு வரவும்"

ஜெருசலத்தில் இருந்த அமெரிக்க துணை கான்சலர் ராபர் ஜி.மக்ரீக்கர் நகர மருத்துவமனைக்கு விரைகிறார்.

அங்கே இருந்த மருத்துவத்தாதி இவரை எதிர்கொண்டு அழைத்து செல்கின்றார்.

"இவர் உயிர் பிழைக்கமாட்டார். சிறிது நேரம் தாக்குப்பிடிக்கின்ற மாதிரி ஒரு மருந்தை கொடுக்கின்றோம். அவருடன் அதிகம் பேச வேண்டாம்".

அறைக்குள் நுழைந்தார்கள். அந்த முதியவர் மெல்ல எழுத்து உட்கார்ந்தார்.

"இளைஞரே! நான் என்னுடைய கடைசி உயிரை "டிக் டேட்" செய்ய விரும்புகின்றேன்... ஆரம்பிக்கலாமா?" இவர் எழுத தொடங்கினார்.

ஒரு மணி நேரம் ...

வீடு... ஹோட்டல்கள்... குதிரைகள்... நகைகைகள்... கார்கள்... நிலங்கள்...

இன்னும் பல இடங்களில் இருந்த ஏராளமான சொத்துக்கள் ... எல்லாவற்றையும் 12 இற்கும் மேற்பட்ட உறவினர்களுக்கு பங்கீட்டு கொடுத்தார்.

யாருக்கு எதை கொடுப்பது என்பதில் சற்றுக் கூட குழப்பம் ஏற்படவில்லை எல்லாம் முடிந்தது.

அவர் பின்னால் சாய்ந்து கொண்டார்."அவ்வளவு தான்! எங்கே விரைவாக ஒரு தடவை படியுங்கள்" என்றார்.

கண்களை மூடிக்கொண்டு நிம்மதியாக அதை கேட்டார்.

கடைசியாக மறுபடியும் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"ஒரு விடயம் மிகுதியாக இருக்கிறது...

இதுதான் மிக முக்கியம்... சரியாக கேட்டுக் கொண்டு எழுதுங்கள். எனது மூத்த மகன் ஜீலியனுக்கு ...

என்வாழ்நாள் முழுவதும் பெரிய பெருமிதமான சொத்தாக நிதி ஒன்றை அளிக்கின்றேன்.

அவனும் அதை பெருமிதமான பொருளாக கருதி வைத்திருந்து வருங்கால சந்ததிகளுக்கு என்னைப் போலவே கொடுத்து விட்டு செல்ல வேண்டும்... அது தான் எழுதிக்கொண்டிருந்தவர் வியப்போடு நோக்கினார். முதியவர் தொடர்ந்தார்...

"அது... நான் அமெரிக்க குடிமகன் என்பதற்கான என்னுடைய சான்றிதழ்களை அவனுக்கு அளிக்கின்றேன்...என்று கூறி முடித்தார்.

அவ்வளவு தான் மகனே... கொண்டு வா... கையெழுத்திடுகிறேன்.

இதை எழுதிக் கொண்டிருந்தவர் அமெரிக்க குடிமகன் என்ற வார்த்தையில் அடிக்கோடிட்டு உயிலை அவர் கையில் கொடுக்கிறார்.

அதை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டே கையெழுத்திட்டு விட்டு தமது கடைசி வார்த்தைகளை உச்சரித்தார்.

"அது தான் எனது விலை மதிக்க முடியாத சொத்து.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பேருந்து நடத்துநர்களுக்கு எதிராக 38 வழக்குகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த வாரத்தில் மட்டும் தனியார் பேருந்து நடத்துநர்களுக்கு எதிராக 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவ்வனைத்து வழக்குகளும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றி சென்ற குற்றச்சாட்டிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழில் கடந்த சில மாதங்களாக தனியார் போக்குவரத்து விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

பேருந்துகளில் அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதும் இவ்வாறான விபத்துக்களிற்கு ஒரு காரணமாக இருக்கிறது.

இதனால் இத்தனியார் பேருந்து நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இச்சட்டநடவடிக்கை மேலும் இறுக்கமடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## இராசி பலன்

4.11.2012
(ஐப்பசி 19, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 11.22 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.26 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கொடுக்கல்-வாக்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் பக்கபலமாக இருப்பர்.

**இடபம்** வருமானம் திருப்திதரும், புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், செலவுகள் அதிகரிக்கும், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

**சிங்கம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் சந்தோசமான செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், புகழ் கூடும்.

**கன்னி** திறமைகள் வெளிவரும் நாள், அரை குறையாக இருந்த பணிகள் மீதியும் செய்து முடிப்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டுபிடிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள், தேவையற்ற மனஸ்தாபங்கள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, தேவைகள் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடைவீர்கள், தொழில் நிமித்தம் அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, அதிகாரிகளின் ஒத்துழைப்பு மத்திமமாக இருக்கும்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 120-140 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 40 | 60 | 80 |
| தக்காளி | 100 | 80 | 50 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 30 | 30 | 40 |
| கோவா | 140 | 70 | 60 | 120 |
| கரட் | 120 | 80 | 70 | 180 |
| பூசணி | 80 | 40 | 35 | 50 |
| புடோல் | 100 | 70 | 40 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 45 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 40 | 65 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 70 | 75 |
| பாகற்காய் | 180 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 90 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 160 | 120 | 80 | 100 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 160 | 80 | 150 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 50 | 60 |
| போஞ்சி | 140 | 240 | 70 | 240 |
| [illegible] | 190 | 180 | 75 | -- |
| கீரை - 1பிடி | 25 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 350 | 250 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 35 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்


(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்கும் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதாக வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

வகை 1C தரத்தை சேர்ந்த இவ்விரு பாடசாலைகளுக்கும் இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இத்தரத்தை சேர்ந்த விண்ணப்பங்களிலிருந்து தெரிவுகள் இடம்பெறாதவிடத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-II கவனத்தில் கொள்ளப்படும். தற்போது அதிபர் சேவை நியமனம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பதவிக்கு வலிகாம கல்வி வலயத்தை சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)




# சிறுவர்கள் அனுபவித்த துன்பங்களுக்கு கடந்த கால யுத்தமே எடுத்துக்காட்டு

## வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்கள் எந்த வகைகளிலெல்லாம் துன்பப்பட்டார்கள் என்பதற்கு எமது கடந்த கால போராட்டம் உலகிற்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது என வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், தற்போது எமது நாட்டில், எமது பிரதேசத்தில் மாறுபட்டதொரு சிந்தனை வளரத் தொடங்கியுள்ளது.

அதாவது பணத்தை முக்கியமாக கொண்டு வாழ்க்கை நடத்தும் முறை காணப்படுகிறது. இதனால் பணத்தை சேமிப்பதில் ஆர்வம் காட்டும் நாம் அதேவேளை எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை மறக்கத் தொடங்கியுள்ளோம்.

எங்கள் தேசம் இதனால்தான் பாதிப்படையப் போகின்றது. இதனை நாம் அனைவரும் மாற்றியமைக்க வேண்டும்.

சிறுவர் தினங்கள், சிறுவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. எமது நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற போரின் போது சிறுவர்களே அதிகம் பாதிப்படைந்திருந்தனர்.

இறுதிக்கட்ட போரின் போது யுத்த பிரதேசங்களில் இருந்து நடந்தே முகாங்களுக்கு வந்து சேர்ந்தனர். ஆனால், இதன்போது சிறுவர்கள் அனுபவித்த கொடூரங்களுக்கு அரசு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். சிறுமிகள் தினம் உலகெங்கும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

பெண்கள், சிறுவர்கள் உரிமைகள் பேணப்படல் வேண்டும். அதற்கு நாம் அனைவரும் சேர்ந்து குரல்கொடுக்க வேண்டும் என்றார். (அ-4)

# "தொடர்பாடல் திறன்" மாதாந்த சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஏற்பாட்டில் தொடர்பாடல் திறன் எனும் தலைப்பிலான மாதாந்த சொற்பொழிவு நிகழ்வுகள் குறிப்பிட்ட நாட்களில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிறவுண்வீதியில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறும். நிகழ்வில் வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9)

# போ.வரத்து விதிகளை மீறிய 415 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த மாதத்தில் மட்டும் போக்குவரத்து விதிகளை மீறிய 415 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 4 இலட்சத்து 98 ஆயிரத்து 550 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தொகையில் பொலிஸாரினால் தண்டப்பணம் விதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 50 ரூபாவும் நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்ட 3 இலட்சத்து 3 ஆயிரத்து 50 ரூபாவும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டவர்கள் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை, ஏனையோர்களுக்கு இடையூறாக வாகனம் செலுத்தியமை போன்ற போக்குவரத்து விதிகளை மீறியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு ஒரு மாதத்தில் மட்டும் ஒரு பகுதியில் 415 பேர் போக்குவரத்து விதிகளை மீறியிருப்பது சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையை வெளிக்காட்டுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-4)





# இல.பத்திரிகை முறைப்பாட்டு ஆ.குழுவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் போடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தமிழ் பிரிவு முறைப்பாட்டு பொறுப்பதிகாரி அமீர் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாடு ஆணைக்குழு என்பன இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு நேற்று யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் பயிற்சிப்பட்டறையொன்றினை நடத்தியது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள ஊடகங்கள் தொடர்பில் சகல தரப்பினரும் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆரம்பித்து 9 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதியப்பட்டன.

இதில் 70 வீதமான முறைப்பாடுகள் சிங்கள பத்திரிகைகளுக்குரியவை. அவற்றில் பல முறைப்பாடுகளை நாம் தீர்த்து வைத்துள்ளோம். தமிழ் பத்திரிகைகள் தொடர்பாக முறைப்பாடுகள் வருவது குறைவு. இதுவரை 15 இற்கும் குறைவான முறைப்பாடுகளே வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்



(யாழ்ப்பாணம்)

புத்தூரை சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் அண்மையில் நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்து தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானான இவர் கோப்பாய் பிரதேச செயலகத்தில் காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். (அ-9)

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# சித்தியடைந்த மாணவர்களுக்கு இன்று பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வடமாகாணசபை நிதியிலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இவை தொடர்பான விபரங்கள் யாவும் அந்தந்த வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு:- 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-30<br>தொழில்/தகைமை:-கணக்கியல் டிப்ளோமா கனடா P.R B/285 | பிறப்பு:- 1965 இந்து<br>நட்சத்திரம்:- சித்திரை<br>உயரம்: 5'6'<br>கி.பா:-21<br>தகைமை:-A/L G/578 |
| பிறப்பு:- 1978 RC (Non)<br>நட்சத்திரம்:-உத்தராடம் 2<br>உயரம்:-5'10"<br>தொழில்/தகைமை:- BA பட்டதாரி, பேராதனை B/286 | பிறப்பு:- 1971 இந்து<br>நட்சத்திரம்:- பூரம் 1<br>உயரம்: 5'1"<br>கி.பா:-43<br>தகைமை:- பட்டதாரி ஆசிரியை<br>எ.பா:- சாதாரண அரச / தனியார் தொழில் G/287 |
| பிறப்பு:- 1978 RC<br>நட்சத்திரம்:-பரணி 2<br>உயரம்:-5'11"<br>கி.பா:-39<br>தகைமை:-BA Jaffna, PG Dip in Edu, பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:-சமயம் மாறவிரும்புவோரும் ஏற்கப்படும் B/294 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 32<br>தகைமை:-BA தேசியக் கல்லூரி டிப்ளோமா ஆங்கிலம்<br>எ.பா:- சைவ போஷனம் மட்டும் G/290 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரோகிணி 3<br>உயரம்:-5'8"<br>கி.பா:-24.25<br>தகைமை:-Bsc in Radio grapher, AME officer(NGO) B/296 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புரட்டாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா:-72.75<br>தகைமை:- Dip in விவசாய போதனாசிரியர் (AT) G/292 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

**MULTITOP EDUCATIONAL CONSULTANT**
Govt Rgd No W/A 17974

**Student Visa**

ஐரோப்பிய நாடான லித்வேனியாவில் (ஜேர்மனிக்கு பக்கத்து நாடு) KAUNAS-TECHNOLOGY UNIVERSITY இல் சாதாரண கல்வித்தராதரத்துடன் Professional Courses, H.N.D Courses, Degree Courses நீங்கள் விரும்பியதுறையில் கல்வி பயிலலாம். I.E.L.T.S தேவையில்லை.
தொடர்புகளுக்கு (892)

MULTITOP EDUCATIONAL CONSULTANT
No. 1-1/1, Frankfurt Place, Colombo-04, 0777422692
Email- multitop888@yahoo.com
யாழ்ப்பாணத்தில் - MR. THASS (தாஸ்)
077 5023729, 077 5989919

**YARL Properties**

புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ். மாவட்டத்தில் எப்பிரதேசமாயினும் காணிகளை விற்கவோ வாங்கவோ எம்முடன் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


# அரசு நீதித்துறையின் மீது ஆதிக்கம் செலுத்த முனைகிறது- ஜே.வி.பி

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறை மீது ஆதிக்கம் செலுத்த அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வலுவான எதிர்க்கட்சிகளை விடவும் மக்கள் பலம் இருந்தால் போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பலத்தையே நாம் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் மக்களின் ஆதரவு கிடைக்குமாயின் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் முயற்சிகளை தோற்கடிப்பதற்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என தாம் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


**STUDY MEDICINE (MD/MBBS)**

**குறைந்த செலவில் ஆங்கில மொழியில் வைத்திய பட்டப்படிப்பு**

இலங்கையில் மருத்துவ உயர்கல்வி வழங்கலில் முன்னோடி நிறுவனமாகிய **PATHE STUDY MEDICINE** தகைமை வாய்ந்த மாணவர்களை மலேசியா, பெலாறுஸ், பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலுள்ள பிரசித்திபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு மிகவும் கட்டுப்படியான செலவில் வைத்தியப் பட்டப்படிப்பு கற்பதற்காக இலங்கையிலிருந்து அனுப்பிவருகின்றது.

**MD** 6 years — Vitebsk State Medical University (Belarus – Eastern Europe)

**MD** 6 years — Angeles University Foundation - (Philippines)

**MBBS** 5 years — College of Medical Science (Kathmandu University) – Nepal

இந்த மருத்துவ பட்டதாரிநெறிகள் உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organization) அங்கீகார அனுமதிப் பட்டியலில் அங்கீகாரம் பெற்றவையும் அட்டவணைப்படுத்தப்பட்டவையும் ஆகும்.

| | |
|---|---|
| SLMC | Sri Lankan Medical Council (Sri Lanka) |
| ECFMG | Education Commission for Foreign Medical Graduates (USA / Canada) |
| GMC | General Medical Council (United Kingdom) |
| AMC | Australian Medical Council (Australia) |

2012 நவம்பர் பிரவேசத்துக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அழையுங்கள் : 0777 662233

PATHE Study Medicine
No 111 ½ Maya Avenue, Colombo 06.

மருத்துவ பட்டதாரிகள் SLMC ERPM (ACT16) பரீட்சைக்கு தோற்ற தகுதி பெறுவதுடன் தற்போதுள்ள தகைமைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுவர்.

PATHE STUDY MEDICINE


## டெஸ்ட்டியூப் பேபி நிபுணர் காலமானார்

பரிசோதனைக் குழாய் குழந்தையை இலங்கையில் முதன் முறையாக உருவாக்கிய மகப்பேற்று நிபுணர் டாக்டர் அருளானந்தராஜா (வயது 62) கொழும்பில் காலமானார்.

முதற் தடவையாக இலங்கையில் பரிசோதனைக் குழாய் குழந்தையை உருவாக்குவதில் வெற்றி கண்ட மகப்பேற்று நிபுணர் வே. அருளானந்தராஜா என்பவரே காலமானார்.

இவரின் நெறிப்படுத்தலில் 8 பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவின் தீவிர முயற்சியால் 1999 நவம்பர் 10 ஆம் திகதி கொழும்பு நியூலங்கா ஹொஸ்பிட்டலில் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை பிரசவமானது.

இது வைத்திய வட்டாரத்தில் சாதனையாகக் கரு[illegible] (அ-2)


## இந்திய திருத்தல யாத்திரை

இந்த யாத்திரைகள் 05.01.2000 ஆண்டு காலமான என் மனைவி யின் வேண்டுகோளுக்கிணங்க சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களி லுள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய வரலாற்று சிறப்புமிக்க குறிப்பாக, மலைக்கோட்டை விநாயகர், பொற்கோவில், திருப்பதி, குருவாயூர், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக சிதம்பரம் உட்பட பஞ்சபூத திருத்தலங்கள், ஆறுபடை வீடுகள், மேல் மருவத்தூரையும், சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகமரு, முருகன், கபாலீஸ்வரர் சிவன், சுவாமிமலை முருகன், வனத்திருப்பதி,காளகஸ்திரிசிவன், பார்த்தசாரதி விஷ்ணு, ஏகாம்பரேஸ்வரர் சிவன், சௌமியதாமோதரப்பெருமான், தாராசுரம் சிவன், திருவானைக்காவல் சிவன், தனித்தனியாக நவக்கிரகங்கள் 9 கோவில், மொீனாபீச்,ஸ்ரீதிரிநேத்ரதஜபுஜ வீர ஆஞ்சநேயர், உவரி முருகன், 60 க்கு மேற்பட்ட ஆலயங்களையும் தரிசிக்கலாம். ஆரம்பம்: 16.11.2012, 16.12.2012 , ஆகிய தினங்களில் 18 நாட்கள்- 10பேர்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை இருவழி விமான ரிக்கெட், கொழும்பிலிருந்து எயார்போட் போகவும் திரும்பிவர வும் வாகனவசதி யாத்திரை தொடங்கி முடியும் வரை 18 நாட்கள் A.C, V.D.O, AUDIO உள்ள சொகுசு வாகன வசதி, காலையும் இரவும் காப்பி, டிபன், மதியம் தரமான சைவ உணவு (சாதம்) ஹோட்டல் களில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒரு லீற்றர் மினரல் வாட்டர், 2பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியல் அறையுடன் கூடிய சுகாதார மான றூம்கள் எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். முக்கியமாக இரவு 10 மணிக்கு மேல் வண்டி ஓட்டப்படமாட்டாது. வயதானவர்களுக்கும், ஆண்கள்,பெண்கள் தோஷ நிவர்த்தி செய்பவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

விருப்பமுடையவர்கள் பாஸ்போட் படமுள்ள பக்கம் ஒரு போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போட் கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும்.

செல்லுமிடங்களில் குறூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 60 படமும், அல்பமும் ஊர்திரும்பும் போது தரப்படும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து 6 பேருக்கு மேல் வருபவர்க ளுக்கு கொழும்பு எயார் போட்டிலிருந்து திரும்பிச் செல்ல எமது செலவில் வாகன வசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

கட்டண விபரங்கள் உள்ளிட்ட மேலதிக விபரங்களை அறிய தொடர்பு கொள்ளுங்கள்...

**கலாநிதி ஸ்ரீ ரெங்கநாதன்**
No.66/2-3/2, Joseph Dias Lane, Colombo-15
Tel: 0777 680102, 0724-222989, 0777 864061
Web: wwww.sridevipilgrims.com

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து
P.திலகவதி அம்மா : T.P.021 222 2711
M.T.வாசகர் : T.P: 0772487939
திருகோணமலையில்
திரு.T. சிவபாலன் Tel: 0777 293271
(சி/1425)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத்தாபனம் பாரிய நிதி நெருக்கடியில்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மிக மோசமான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதனால் இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் சக்தி வழங்குநர்களுக்கு எரிபொருளை தொடர்ந்து விநியோகிப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அவ்விரு தரப்பினரும் செலுத்த வேண்டிய நிலுவையை ஏக காலத்தில் செலுத்தாவிடில் இன்னும் நெருக்கடி அதிகரிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்விரு நிறுவனங்களும் எரிபொருள் கொள்வனவு செய்தமைக்கான கட்டணங்களை கடந்த 10 மாதங்களாக செலுத்தவில்லை. இவ்வாறான நெருக்கடியான நிலைமையின் கீழே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆகையினால் இவ்விரு நிறுவனங்களுக்கும் எரிபொருள் விநியோகிப்பது தொடர்பில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மு.சம்மேளத்தின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் *நேரிய சிந்தனைகள்* மற்றும் *கற்றுக் கொண்ட பாடங்களுக் கான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை* தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறப்புப் பேச்சாளர்களாக இங்கிலாந்து கண் மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி ஆர். பாலா, ஓய்வு பெற்ற யாழ். கல்வி வலய பொருளியல் ஆலோசகரும் தேசிய கல்வி நிறுவன பொருளியல் விரிவுரையாளருமான ஏ.சி.ஜோர்ச் ஆகியோரர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# தோரியம் மூலம் இந்தியாவுக்கு மின்சாரம்; சீனாவில் அப்துல் கலாம் பேச்சு

(சென்னை)

கதிரியக்கமுள்ள தோரியம் தனிமத்தின் மூலம் இந்தியாவிற்கு இனிவரும் காலங்களில் மின்சாரம் தயாரிக்கப்படுமென அப்துல் கலாம் சீனாவில் தெரிவித்தார்.

சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அப்துல் கலாம் அந்நாட்டு செய்தியாளர்களிடத்தில் உரை நிகழ்த்துகையில், இந்தியா தற்போது 20 ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

இருப்பினும் தற்போது யுரேனியத்தின் மூலம் மின்சாரம் எடுத்து வருகிறோம். இன்னும் 10 ஆண்டுகளில் தோரியத்தின் மூலம் மின்சாரம் எடுத்து மின்சாரப் பற்றாக்குறையை போக்குவோமென கூறியிருக்கிறார்.

கூடங்குளம் போராட்டம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த கலாம் இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் மக்களை விவாதிக்காதீர்கள், கலந்தாலோசிக்காதீர்கள் என கூற இயலாது என்றார். (அ-2)

# தமிழக சட்ட பேரவைக்கு வைரவிழா; நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு

தமிழக சட்டப் பேரவை இந்த ஆண்டுடன் 60 ஆண்டு நிறைவு விழா நடைபெற வுள்ளமையால் வைர விழாவை கொண்டாடவுள்ளது.

தமிழக ஆளுநர் தலைமையில் சட்டப் பேரவை வைரவிழா நடைபெறும் என்றும் இவ்விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பங்கேற்பார் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப் பேளரவை விதி 110 இன் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு தமிழ்நாடு சட்டப் பேரவை இந்த ஆண்டு 60 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதையடுத்து தமிழ்நாடு சட்டப் பேரவையின் வைரவிழா புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சட்டப் பேரவை மண்டபத்தில் வரும் 30 ஆம் திகதி வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

வைர விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை அழைக்கும் வகையில் பேரவைத் தலைவர் பி.தனபால், நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான குழுவினர் கடந்த மாதம் 26 ஆம் திகதி டில்லி சென்று அவரைச் சந்தித்து எனது அழைப்புக் கடிதத்தை வழங்கி அழைப்பு விடுத்தனர்.

எனது அழைப்பினை ஏற்றுக்கொண்டு வைர விழாவில் கலந்துகொள்ள ஜனாதிபதி தனது கடிதம் மூலம் ஒப்புதல் தெரிவித்துள்ளார் என்றார். (அ-2)

# கெஜ்ரிவால் மீது ஷூ வீச்சு

(சென்னை)

ஊழலுக்கு எதிரான இந்தியா அமைப்பைச் சேர்ந்த அரவிந்த கெஜ்ரிவால் மீது சோனியா காந்தி குடும்பத்திற்கு நெருக்கமானவர் ஷு வீசியதாக தெரியவந்துள்ளது.

அரவிந்த் கெஜ்ரிவால் முகேஷ் அம்பானி மீது குற்றச்சாட்டுக்களை விதித்தார்.

நாட்டின் ஆட்சியை நிர்ணயிப்பது அம்பானி போன்ற தனியார் நிறுவன தலைவர்களே என தெரிவித்தார் கெஜ்ரிவால். இந்தக் கூட்டத்தின் போது 3 நபர்கள் கெஜ்ரிவாலை நோக்கி ஆவேசமாக கேள்வி கேட்டனர்.

அப்போது அதில் ஒருவர் கெஜ்ரிவால் மீது ஷு வீசினார். இவர் சோனியா காந்தியின் குடும்பத்திற்கு நெருக்கமானவர் என்பது தெரிய வந்துள்ளது.

சோனியா காந்தியின் மருமகன் றொபர்ட் வதோராவின் மோசடி புகாரை வெளிப்படுத்திய காரணத்தினால் கெஜ்ரிவால் மீது ஷு வீசப்பட்டதாக கூறப்படுகிறது. (அ-2)

# புத்தக விற்பனைக்காகவே என்மீது குற்றம் சாட்டப்படுகிறது

## விசாரணை அதிகாரியின் புத்தகம் குறித்து எம்.கே.நாராயணன்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான வீடியோ ஆதாரங்களை தாம் மறைத்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை முன்னாள் உளவுத்துறைத் தலைவரும் மேற்கு வங்க ஆளுநருமான எம்.கே.நாராயணன் மறுத்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் விசாரணை அதிகாரி ரகோத்தமன் தான் எழுதியுள்ள Conspiracy to kill Rajiv Gandhi-From CBI Files என்ற புத்தகத்தில் ராஜீவ் கொலை சம்பவத்தின்போது அங்கிருந்த உளவுத்துறையின் வீடியோ கிராபர் அதனை படம்பிடித்ததாகவும் ஆனால், அந்த வீடியோ காணாமல் போய்விட்டதாகவும் அதனை அப்போது Intelligence Bureu தலைவராக இருந்த எம்.கே.நாராயணன் மறைத்துவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்குச் சென்றுள்ள நாராயணனிடம் இது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது அதற்கு பதில் அளித்த நாராயணன் அதுபற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றார்.

அதேசமயம் தனது புத்தகத்தின் விற்பனையை மனதில் கொண்டே ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணை அதிகாரி ரகோத்தமன் இவ்வாறு கூறி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ் கொலை தொடர்பான அனைத்து விசாரணைகளும் முடிந்துவிட்டதாகவும் அதில் புதிதாக சொல்வதற்கு எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார். (அ-2)

# பூந்தமல்லி அகதிமுகாமுக்கு மாற்றப்பட்டார் செந்தூரன்

(சென்னை)

உரிய ஆவணங்கள் இன்றி கடல் வழியாக தமிழகத்திற்கு பயணித்த இலங்கை அகதிகளை பொலிஸார் கைது செய்து செங்கல்பட்டில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் வைத்துள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து பூந்தமல்லி சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்ட செந்தூரன் (வயது 34) சிறப்பு முகாம்களில் உள்ள அகதிகளை விடுதலை செய்து திறந்த வெளி முகாமிற்கு மாற்ற வேண்டும். தங்கள் மீதுள்ள வழக்குகளை முடிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார்.

செந்தூரனின் உடல் நிலை மோசமானதால் சென்னையில் உள்ள அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை முடிந்து மீண்டும் முகாமில் கொண்டு வந்து அடைக்கப்பட்டார். ஆனால், அதன் பின்னரும் அவர் உண்ணாவிரதம் இருந்து வந்ததால் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி செந்தூரன் மீது பொலிஸார் தற்கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

பின்னர் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிணையில் விடுதலை ஆனார். இதையடுத்து தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்த செந்தூரனை செப்டெம்பர் 25 ஆம் திகதி பூந்தமல்லி பொலிஸார் மீண்டும் தற்கொலை முயற்சி வழக்கின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தொடர் உண்ணாவிரதம் இருந்து தற்கொலை முயற்சி வழக்கின் கீழ் 2 முறை கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட செந்தூரன் பிணையில் விடுதலையானார். விடுதலையான செந்தூரனை பொலிஸார் மீண்டும் பூந்தமல்லியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமிற்கு மாற்றினார்கள். (அ-2)

# தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தி போரைத் தடுக்க முடியும்-ஜனாதிபதி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலம் போரைத் தடுக்க முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் மூளக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கக் கூடிய மிகச் சிறந்த வழி தேசியப் பாதுகாப்பை பலப்படுத்தலாகும்.தேசிய சமாதானத்தை கட்டியெழுப்ப பேதமற்ற நாடொன்றை உருவாக்க வேண்டும்.போர் புரிவதனை விடவும் போரை தவிர்ப்பதற்கான வழிமுறைகளே மிகவும் சிறந்ததாகும்.

இராணுவத்தினரின் கல்வி, ஒழுக்கம்,சட்டக் கீழ்ப்படிவு போன்ற விடயங்களை பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முயற்சித்தால் அதனை சிலர், அரசாங்கம் இராணுவ மயமாக்கலில் ஈடுபட்டுள்ளதாக விபரிக்கின்றனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)


**New Lucky Beauty Parlour**

**யாழ். மண்ணில்......**

அழகுக் கலை பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதோடு நவீன முறையிலான அழகுக்கலை பயிற்சியுடன் தையல், பூச்செண்டுகள் வடிவமைத்தல் கேக் ஐஸ்சிங் போன்றவற்றுக்கான புதிய பிரிவுகளும் ஆரம்பம்.

இடம்:- நியூ லக்கி அழகுக்கலை நிலையம் 407, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

இந்தியாவில் சிறப்புச் சான்றிதழ்களை பெற்ற பயிற்சியாளர்கள்

குறைந்தளவிலான பகுதியளவான கட்டண அறவீடு

செயன்முறை ரீதியான விளக்கம்

உடனடியாகச் செய்து பார்ப்பதற்கான சந்தர்ப்பம்

முன் பதிவுகளை உடனே மேற்கொண்டு உங்கள் பயிற்சிகளை ஆரம்பித்து நீங்களும் ஒரு அழகுக்கலை நிபுணராகுங்கள்.

தொடர்புக்கு :- 0775925397 (813)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்
## சங்குநாதம்

## அஞ்சல் சேவை ஓர் ஆலவிருட்சம்

தபாற் திணைக்களமெனும்
மூத்த பெயர் கொண்டு- பின்பு
சொற்பதம் மாறி அழகுசேர் அஞ்சலென
மிகுசேவைதான் தந்து மிஞ்சுகின்ற
புகழோடு - அன்று
தகுதிகாண் திணைக்களமாய்
தரணியிலே தடம்பதித்து
வஞ்சமிலாச் சேவையினை வளமாகத்
தானீய்ந்து - இன்று
அஞ்சல் திணைக்களமாய்
அணி செய்து நிற்கிறதே
நுகர்வோர் தேவையது
பரிவோடு கேட்டறிந்து- பதில்
பகர்வோரே எங்கள்
பண்பான பணியாளர்
ஆண்டுகள் புரண்டோட
மாறிவரும் நவயுகத்தில் -நாங்கள்
பூண்டோமே சபதமது
புதுமையுடன் பணிசெய்வோம்

மயில்வேலாயுதபிள்ளை
புளியம்பொக்கணை

## அவரவர் பார்வையில் ஏக்கம்

போர்ப் பூமியிலே
பந்த பாசமறுந்து
பரதேசிகளானோம்
எம் வாழ்வில் பகலவன்
வருவது எப்போது
அவன் கரம்பிடிக்க - எம்
கரம் நீட்டுகிறோம்
ஏக்கத்தோடு...

நாதப்பிரியை
ஊரிக்காடு

## காலைப்பொழுதில்

காலைப்பொழுதில்
கண்விழித்து
நாட்குறிப்புப் பக்கத்தில்
கவிதை ...
எழுத அமருகிறேன்
கண்ணெதிரே உன்முகம்
காலைப்பொழுதில்
கருத்தெழுத கூட என்னால்
முடியவில்லையே....

எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்

## நீயும் நானும்

காதல் கடலில் நீயும் நானும்
சாதல் வரினும் காதல் சாகாதென்று
தாளம் போட்டு கும்மியடித்தோம்
மோதல் வந்தது காதல் பிரிந்தது
நெஞ்சு வலிக்க கண்ணும் கலங்க
வஞ்சிமகளே உள்ளம் உருக
கெஞ்சி அழுது ஏங்கி நிற்கிறேன்
நஞ்சு அருந்திடவோ வாழ்வு தருவியோ?
தாடி வளர்த்து கன்னம் முழுதும்
காடு போல எந்தன் முகம்
வாடி வதங்கி சோர்ந்து கிடக்குது
மாடி வீடோ கல்லறை தானோ?
உன்னை நம்பி வந்த ஜீவன்
இந்த உலகில் பட்ட துயரம்
எண்ணிப்பார்த்தால் இதயம் வெடிக்கும்
கண்ணீர் துடைப்பியா தனிக்க விடுவியா?

உயிரோவியன்

## இமயம் தொட...


தோல்விகளை
கற்றறிந்து கொள்
பிறர் நலனுக்காய்
உனது சுகங்களை
இழக்கத் தயாராகு
சிலுவையில் அறைந்தபோதும்
இயேசுபிரான்
பிறர் நலனுக்காய் மன்றாடினார்
நீ இயேசுவாய் வாழாவிடினும்
மனிதனாகவேனும் வாழப்பழகு

மாவை நா.கஜேந்திரன்

## நம்பிக்கையின் பரிசு

நம்பினேன் உன்னை மட்டுந்தான்
காலைவாரி விட்டியே!
உண்மையானவன் என்றெண்ணினேன்
ஊமையாக்கி விட்டியே!
உத்தமன் என்று நினைத்தேன்
ஊதாரித்தனம் பண்ணிவிட்டியே!
நல்லவன் என்றல்லவா
காலில் செருப்பாக இருந்தேன்
நயவஞ்சகனாக இருக்கிறியே
நம்பினேன் துணைவன் என்று
துரோகி ஆகிவிட்டியே!!!

மோ.மோகனா
அல்வாய் வடக்கு



# மௌனத்தின் தேடல் - 128

## ஏக்கம்

ஏய்! மனிதா?
பட்டதுயர் போதாதென்று
என்னும் எத்தனை
உயிர்களை பலி எடுக்க
எத்தணிக்கிறாய்!
அவர்கள்
தமிழனாய் பிறந்த
குற்றத்திற்காகவா?
பாவம் அப்பாவிகள்
விட்டுவிடு

அ.தவராசா
மு/ மல்லாவி மத்திய கல்லூரி

## மறதி

ஓ மனிதா!
பணம் தேடி
அவுஸ்திரேலியாவுக்கு
பயணிக்கிறாய்
நம் நாட்டிலும்
பசு உண்டென்பதை
மறந்து விட்டாயோ?

கெ.நிப்தன்
கொழும்புத்துறை

## பசுவதை தவறானது

பால் தந்து நன்றி
சொல்லும் செல்லப்பசு
தோள்மீது சுமக்காத தாயின்
கால்களைச் சில்லாக்கி
முதுகிலே அமர்ந்து
கழுத்திலே குத்துகின்றாய்
நில் மனிதா
எங்கள் உடலுக்கு
நல்ல சக்தி தரும்
தெய்வமல்லவா பசு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## அற்புதம்

நண்பனே
உன் செயல் அற்புதமானது
கஞ்சத்தனமாக
தெரியவில்லையா?
காசு கொடுத்து
எரிபொருள் வாங்க
கஷ்டப்பட்டு
புல்லைக் கொடுத்தா
ஓட விடுவது?
உன் செயல்
அற்புதமானது

ஆ.ஆமோஸ்
கொழும்புத்துறை

## ஆக்கத்திறன்

கற்பனைக்கெட்டா ஓர்
அற்புத வடிவந் தன்னை
கற்ற நல்லறிவைக் கொண்டு
மற்றவர் போற்றும் வண்ணம்
உற்பத்தி செய்த இவ்விளைஞன்
நற்பணி தொடரட்டும் நம்
நாடு போற்ற வாழட்டும்

துரை
தென்மட்டுவில்

## கற்பக தருவாய்

பயணத்தை சொகுசாக்கி
பௌவியமாய் நினைத்தவிடம்
செல்வதற்கு துணை நிற்கும்
மோட்டார் சைக்கிள்தனை...
எண்ணியதை எண்ணியவாங்குதரும்
கற்பகதருவாய் நினைத்தால்...
விபத்தென்பதே இல்லாது
சீரான பாதையில் சிறப்பாய்
நடைபயில துணை நிற்கும்தானே

வ.ச.செல்வராசா
[illegible]

## மனித வித்தைகள்

மனிதன் செய்யும்
மந்திர வித்தையில்
மரணிக்கப் போகிறது
மகத்தான உயிரொன்று
எரிபொருள் உயர்வால்
எரிவது நாடு மட்டுமல்ல
மேய்ந்து உண்ணும்
மிருகங்களின்
வாழ்க்கையும்தான்

சூ.அ.சுலக்ஷன்
மண்டைதீவு

## பரிசு

உந்துருளி வாங்க
ஆசை கொண்டாய் நண்பா
நாம் மூவர் பரிசாய்
தந்தோம் உந்துருளி நண்பா

பி.குகனேஸ்வரன்

## விந்தை மிகு உலகில்

விந்தை மிகு
விஞ்ஞான உலகில்
கறவை மாடுகளிலும்
உன்னால் சவாரி
செய்யமுடிகிறதா
மனிதா...!

நிதுநிலா பைரவி
கலிகை

## புதுவடிவம்

அன்று நம் முன்னோர்கள்
சுகமாய் பயணித்த
மாட்டுவண்டி இன்று
இப்படி அழகாய் புதுவடிவம்
எடுத்து நிற்குதடா

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மனிதனின் நிலை மாற்றம்

ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்
வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்
விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ச்சி
அடைந்த காலத்திலும்
மனிதா! உனக்கு ஏன் இந்த விபரீத ஆசை

ஸ்ரீ.பிரதீப்

## மாறும் நுட்பங்கள்

அதிவேக
தொழில்நுட்ப வளர்ச்சியில்
மிசின்களின் தோற்றம்
அதிகரிக்கும் இங்கே
உயிருள்ள பிராணியை வைத்து
புதிய மிசின்
கண்டுபிடித்துள்ளார்களே
இதுதான் மாறும்
தொழில்நுட்பமா

ஜெயராம்
அல்வாய் திடல்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 129



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.11.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபாச இணையத்தளங்களை தடை செய்வதே நல்லது

## மங்கள எம்.பி. தெரிவிப்பு

பத்திரிகையில் வெளிவராத முக்கியமான செய்திகள் இணையத்தளங்களில் வெளியிடப்படுவதால் அந்த அரசியல் செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் தடை செய்யாது ஆபாச இணையத்தளங்களை தடை செய்தால் பிரச்சினையில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்கள் செய்யும் பணிகளை பத்திரிகைகள் செய்ய தவறியுள்ளதால் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முறையொன்று அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் உயர் மட்டத்தில் உள்ள ஒருவரின் மகன் தனது பெண் பிள்ளையின் பிறந்த தினத்திற்காக 80 இலட்சம் பெறுமதியான குதிரைக் குட்டியொன்றை கடந்த ஜூன் மாதம் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்து வழங்கியுள்ளார். அது குறித்து யார் கேள்விகளை எழுப்புவது எனவும் மங்கள சமரவீர கேட்டுள்ளார். (அ-2)

# மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சிரமங்களுடன் வாழ்கின்றனர்

## ஐ.ஆர்.ஐ.என். ஊடகம் சுட்டிக்காட்டு

மீள்குடியேற்றப்பட்ட இடம்பெயர் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஐ.ஆர்.ஐ.என். ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த வடக்கு மக்களில் பலர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்காலிக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் மீள் குடியேற்றப்பட்ட மக்களே அதிகளவு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட சிலர் மிக நீண்ட காலமாக இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ச்சியாக தங்க நேரிட்டுள்ளது என சுட்டிகாட்ப்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்நோக்க நேரிடும் என ஐக்கிய நாடுகள் மனிதாபிமான இணைப்பு நிறுவனத்தின் வடக்கு இணைப்பாளர் பொன்டினி ரண்டிசியோ தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான இடைத்தங்கல் முகாம்கள் உரிய தரத்தைக் கொண்டமையவில்லை என சர்வதேச தன்னார்வ பணியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நீதியரசர் மீதான குற்றச்சாட்டு தெரிவுக்குழு மூலம் அறியவரும்

## அமைச்சர் டளஸ் நம்பிக்கை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை குறித்த உண்மை நிலையை பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமே அறிந்து கொள்ள முடியும் என இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அதனால் குற்றப்பிரேரணை குறித்து மேலதிகமாக கருத்து வெளியிட முடியாதென அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவர காரணம் அவர் திவிநெகும மற்றும் உயர்கல்வி இசட் புள்ளி விடயங்களில் அரசுக்கு பிரதிகூலமாக தீர்ப்பு வழங்கியமையா என ஊடகவியலாளர் ஒருவர் இங்கு கேள்விஎழுப்பியுள்ளார்.

அது வெறும் கருத்தே எனவும் பிரதம நீதியரசர் மீது வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் டளஸ் அழகபெரும அதற்கு பதிலளித்தார். (அ-2).

# அரசியல்வாதிகளின் பராமரிப்புக்கு இருபது வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது

## ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதிகளை பராமரிப்பதற்காக வரவு செலவு திட்டத்தில் 20 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய பிக்குகள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது .எதிர்வரும் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 20 வீதம் அரசியல்வாதிகளுக்கான செலவுகளாக அமைந்துள்ளது என ஐக்கிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் தினியாவெல பாலித தேரர் தெரிவித்துள்ளார்.

மிகவும் முக்கியமான துறைகளுக்கு அரசாங்கம் போதியளவு பணத்தை ஒதுக்கீடு செய்யத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். மாறாக பத்து சிரேஷ்ட அமைச்சர்களுக்காக 400மில்லியன்ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

கல்வி, சுகாதாரம் போன்ற மிக முக்கியமான துறைகளுக்கு மிகவும் சொற்பளவு நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சிற்காக 9.9 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதிக்கு 7.4 பில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் வருடாந்தம் 300 பில்லியன் ரூபாவினை வட்டியாக செலுத்தி வருவதாக ஐக்கிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் தினியாவெல பாலிததேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நீதித்துறைக்கு அச்சுறுத்தல் இடிஅமீன் ஆட்சிக்கு ஒப்பானது

## ரவி எம்.பி தெரிவிப்பு

நீதிமன்றின் சுயாதீனதன்மையை குழிதோண்டி புதைப்பதானது இடிஅமீனின் சர்வாதிகார ஆட்சியை போற்றுவதாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் மீதான தலையீடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

நீதிமன்றத் தலையீடுகளை கட்டுப்படுத்த கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசியக்கட்சி முன்வரும்.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நீதிமன்றத்தின் தலையீடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமெரிக்க மாட்டிறைச்சி இலங்கைக்கு ஏற்றுமதி

## அந்நாட்டின் ஏற்றுமதி; கூட்டமைப்பு தீர்மானம்

அமெரிக்க மாட்டிறைச்சியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்க இறைச்சி ஏற்றுமதி கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்க உற்பத்தி பொருட்களை பரவலாக வீச்சில் ஏற்றுமதி செய்வதற்கும் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இறைச்சி சந்தை கடந்த 2003 ஆண்டு மூடப்பட்டது. தற்பொழுது பொருளாதார மற்றும் அரசியல் காலநிலை நிறுவப்பட்டுள்ளதனால் இந்த சந்தர்ப்பத்தை மீண்டும் வலய சந்தைகளில் நம்பிக்கையுடன் அணுகுவதற்கு தீர்மானித்ததாக அமெரிக்க இறைச்சி ஏற்றுமதி கூட்டமைப்பின் ஆசிய பசுபிக் வலயத்துக்கான பிரதித்தலைவர் ஜொயில் ஹக்கார்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையர் சமாதானத்தை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் தற்போது பொருளாதார அபிவிருத்தி மேம்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையும் புத்துணர்வு பெற்றுள்ளது. மொத்த தேசிய உற்பத்தி 8 சதவீதமாக இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் நோக்கிலேயே மேற்படி தீர்மானத்தை எடுத்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இனிமேலாவது ஈழத்தமிழர்களுக்கு விடிவுகாலம் ஏற்பட வேண்டும்

## கருணாநிதி உருக்கம்



ஐ.நா சபையில் டெசோ தீர்மானத்தை வழங்கியுள்ளதால் ஈழத் தமிழர்களுக்கு ஒளிமயமான வாழ்வு கிடைக்கும் என கருணாநிதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தலைவர் கருணாநிதி நேற்றைய தினம் நிருபர்களுக்கு பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு, டெசோ மாநாட்டு தீர்மானங்களும் தி.மு.கவின் கருத்துக்களும் அடங்கிய விரிவான மனுவை இரத்த வழியில் இதயத்துடிப்பு என்ற தலைப்பில் ஐ.நா. மன்றங்த்தில் மு.க.ஸ்டாலின், டி ஆர். பாலு ஆகியோர் நேரில் வழங்கினார்கள். அதில் டெசோ இயக்கத்தின் சார்பில் தி.மு.க தலைவர் என்ற முறையில் நான் கையெழுத்திட்டு உள்ளேன்.

இலங்கையில் ஏற்கனவே நடைபெற்ற, இப்போது நடந்து கொண்டிருக்கின்ற நிலைவரங்கள் பற்றி ஐ.நா. துணைப் பொதுச்செயலாளர் ஸ்டாலினிடமும் டி.ஆர்.பாலுவிடமும் நேரடியாக கேட்டு தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இந்த முன்னேற்றம் ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரத்தையும் அரசியல் எதிர்காலத்தையும் ஒளிமயமாக ஆக்குவதற்கு பயன்படும் என்ற நம்பிக்கையை பெற்றுள்ளோம்.

நாங்கள் கொடுத்த ஆவணத்தோடு இலங்கையில் நடந்த கொடூர காட்சிகளை சி.டியாக தயாரித்து இணைத்துள்ளோம். தி.மு.க இலங்கைத் தமிழர்களுக்காக ஐ.நா. மன்றத்தை அணுகுவது இது முதன் முறையல்ல. ஏற்கனவே 1961 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பற்றி தீர்மானம் நிறைவேற்ற ஐ. நா.சபை தலையிட்டு தமிழர்களை பாதுகாக்க கோரிக்கை வைத்தோம்.

இனிமேலாவது ஈழத்தமிழர்களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டும். அதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்கான முயற்சியை ஐ.நா சபை எடுக்க வேண்டும்.

தேவையான ஒத்துழைப்பை இந்திய அரசும் வழங்க வேண்டும். இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பொது வாக்கெடுப்பு நடத்த வலியுறுத்தி உள்ளோம். அதை செயல்படுத்த இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கையில் ஈழம் பிரிந்து தனி நாடு உருவாக்க வேண்டும் என்பது டெசோ தீர்மானம் அல்ல. தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளோம். அதில் நன்மை விளையும் என்று நம்புகின்றோம். இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலும் எந்த பகுதியிலும் பயிற்சி அளிக்க கூடாது. இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காட்டுவிலங்குகள் வீட்டுக்கு வருகின்றன



(மல்லாவி)

வன்னியில் பெய்த கடும் மழை காரணமாக காட்டு விலங்குகள் தொடக்கம் பாம்புகள் வரை மக்கள் குடியிருப்புகளினுள் புகுந்து அழிவுகளையும் அச் சத்தையும் ஏற்படுத் துகின்றன. கடந்த 2 ஆம் திகதி மாங்குளம் மகா வித்தியாலய சமையற் கூட பகுதிக்கு முன் னால் புகுந்த நாகபா ம்பு ஒன்று பாடசாலைச் சமூகத்தினரின் பல மணி நேர போராட்டத்தின் பின் சாடி ஒன்றினுள் அடைக்கப்பட்டு காட்டுப்பகுதியில் கொண்டு சென்று விடப்பட்டது. கடந்த வருடமும் இதேபோன்று இப்பாடசாலையில் ஆசிரியைகளின் விடுதிக்குள் புகுந்து ஆசிரியை ஒருவரை தீண்டியது. உடனடியாக அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டமையினால் உயிர்காப்பாற்றப்பட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு மாங்குளம் துணுக்காய் வீதியில் உள்ள காணிக்குள் புகுந்த யானைக்கூட்டம் பயன்தரு மரங்களான தென்னை,வாழை ஆகிய மரங்களை நாசப்ப டுத்திச் சென்றதாகவும் தெரிவித்துள்ளனர். (ந-9-15)

# விரிவுரையாளர்களுக்கான உறுதிமொழி காற்றில் பறந்தது

## விரிவுரையாளர் சங்க பேச்சாளர்

(கொழும்பு)

தமக்கு உறுதியளித்தபடி இலங்கையின் உயர்கல்வி அமைச்சு சுற்று நிருபங்கள் சில வற்றை இன்னும் விலக்கிக் கொள்ளவில்லை என்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சிகள் உட்பட்ட சில விடயங்கள் தொடர்பில் பல்கலைக்கழக மூதவைகளுடன் பேசவேண்டும் என்று விரி வுரையாளர்களும் அரசாங்கமும் இணங்கி யிருந்தன.

இதன்படி தற்போதுள்ள கட்டாய தலை மைத்துவப் பயிற்சி தொடர்பான சுற்று நிருப த்தை விலக்கிக் கொள்வதென்று இலங்கை யின் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமை யிலான குழுவினர் உடன்பட்டிருந்தனர்.

எனினும் இதுவரை அந்த உடன்பாடு செயற்படுத்தப்படவில்லை என்று பல்கலை க்கழக விரிவுரையாளர் சங்கப் பேச்சாளர் மஹிம் மெண்டிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே தாம் அரசாங்கத்தினால் பாரிய ளவில் அசௌகரியங்களுக்கு உள்ளாகி யிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தவிர விரிவுரையாளர்களின் பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட உறுதிமொ ழிகளும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஆயுதங்களை மீட்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மறை த்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்கும் நோக்கில் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இறுதிக்கட்ட போரின் போது முல்லைத் தீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரியளவு ஆயுதங்களை புதைத்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இவ்வாறு நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டு ள்ள ஆயுதங்களை மீட்பதற்காக அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த ஆயுதங்களை மீட்கும் விசேட நடவ டிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமாகியு ள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கரையோரத்தின் ஆழமான குழிகளைத் தோண்டி அதனுள் பாதுகாப்பான முறையில் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் முல்லைத் தீவு பகுதியில் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கக்கூடும் என இராணுவத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# டுபாயில் நகை திருடிய இலங்கையர் கைதானர்

டுபாயில் மாளிகைகளுக்குள் புகுந்து 6 இலட்சம் திர்ஹாம் (டுபாய் பணம்) பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையிட்ட இலங்கையர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒரு மாளிகையில் 3 ஆயிரத்து 500 திர்ஹாம் பெறுமதியான பணத்தை கொள்ளையிட்டுள்ளதாக டுபாய் குற்றவியல் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்ப்பட்டவர்களில் ஒருவர் பாகிஸ் தான் சாரதி எனவும் மற்றைய நபர் 26 வயது டைய இலங்கை அலுவலக உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்க நகைகளை மாத்திரமன்றி மடிக்க ணனியையும் இவர்கள் களவாடியுள்ளனர். களவாடப்பட்ட பொருட்கள் சிலவற்றை டுபாய் பொலிஸார் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் விடுதியில் இருந்து மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள கொள்ளை வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு அறிவிக்கப்படவுள்ளது. (அ-2)


மாபெரும் விசேட விலைக்கழிவு

**Jet D Express Courier Service**

விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்



உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

(சி-1289)

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

**தீபாவளியை முன்னிட்டு**

Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.



Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150,0772187 301

No: 77E. Manning Place,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909


# 5 இலட்சம் நட்ட ஈடு வழங்க இணங்கினார் பெட்ரிக்கா

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் பெட்ரிக்கா ஜேன்ஸ் பிரபல சட்டத்தரணி நலின் லந்துவேஹெட்டிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி நலின் லந்துவேஹெட்டிக்கு அவதூறு ஏற்படும் வகையில் செய்திகளை பிரசுரம் செய்ததாகத் தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்றைய தினம் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நடை பெற்றது. இதன்போது இரு தரப்பினரும் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இதன்படி வழக்கைத் தாக்கல் செய்த சட்டத்தரணி நலின் லந்துவேஹெட்டிக்கு நட்ட ஈடாக 5 இலட்சம் ரூபாவினை வழங்குவதற்கு பெட்ரிக்கா ஜேன்ஸ் இணங்கியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆகிய காலங்களில் சண்டே லீடர் பத்திரி கையில் பிரசுரமான சில செய்திகள் தொட ர்பில் சட்டத்தரணி லந்துவேஹெட்டி இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

குறிப்பாக புனித தோமியர் கல்லூரியின் மாணவரான லந்துவேஹெட்டியின் புதல்வர் பகிடிவதையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. இதே வேளை இந்த நட்ட ஈட்டுப் பணத்தை தலா ஒரு இலட்சம் என்ற அடிப்படையில் ஐந்து அறக்கட்டளைகளுக்கு வழங்க லந்துவே ஹெட்டி தீர்மானித்துள்ளார். (அ-2)

# நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட 26 பேருக்கும் விளக்கமறியல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட போது கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப் பப்பட்ட 26 பேரை நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் டபி ள்யூ கே. துலானி எஸ். வீரதுங்க உத்தரவி ட்டார்.

திருகோணமலை, தெய்வேந்திர முனை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்க ளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, பேருவளை, தெய்வே ந்திரமுனை ஆகிய பிரதேசங்களிலிருந்து ரோலர் படகுகளில் சட்ட விரோதமாக இவர்கள் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய கரை யோரப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைத்து திருப்பி அனுப்பப்பட்ட நிலை யில் கடந்த வியாழக்கிழமை இரவு கட்டுநா யக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களை பொறுப் பேற்ற குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகா ரிகள் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தியதை அடுத்து இந்த விளக்கமறியல் உத்த ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிவாரண பணிகளுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் நிலவி வரும் சீற்றம் காலநிலையினால் முன்னெடுக்கப்படும் அனர்த்த நிவாரண செயற்பாடுகளுக்கென ஆரம்ப கட்டமாக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போதைய நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

அடைமழை மற்றும் சுழல் காற்றின் காரணமாக இதுவரையில் 18 மாவட்டங்களில் அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன. தொடர் மழை மற்றும் கடும் காற்று காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்கவென அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாரிய அனர்த்தங்கள் இடம்பெறும் பட்சத்தில் களத்தில் இறங்கி உயிர்களை காப்பாற்றுவதற்காக இராணுவம் கடற்படை விமானப் படை தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கு மேலதிகமாக படகுகள் மற்றும் விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சீரற்ற காலநிலை மற்றும் இடம்பெறக்கூடிய அனர்த்தங்கள் குறித்து விழிப்புணர்வுடன் செயற்படும் பொருட்டு வானிலை அவதான நிலையமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் 24 மணித்தியாலங்களும் செயற்படுகிறது.

அதேவேளை அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டிருப்பதாவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# விமலின் கருத்தை கேட்டு சிரிக்கத்தான் முடியும்

## அமைச்சர் வாசுதேவ கிண்டல்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் கோமாளித்தனமான கருத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாயணக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வீரவன்சவின் சில கருத்துக்கள் நகைப்புக்குரியவை. அவ்வாறான கருத்துக்களை கேட்டு சிரிப்பதை தவிர வேறு ஒன்றும் செய்ய தேவையில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச்சட்டத்தை இரத்து செய்வதற்கு ஆதரவளிக்காத ஆளும் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தை விட்டு விலகவேண்டுமென அண்மையில் விமல் வீரவன்ச கோரியிருந்தார்.

யார் என்ன சொன்னாலும் இன்னமும் 13 ஆம் திருத்தச்சட்டம் அமுலில் இருக்கின்றது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சீன அரசின் அழைப்பின் பேரில் த.தே.கூட்டமைப்பு குழு விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மூன்று பிரதிநிதிகளை கொண்ட குழு சீன அரசின் அழைப்பின் பேரில் பத்து நாட்கள் சுற்றுப் பயணமாக நாளைதிங்கட்கிழமை அதிகாலை சீனா புறப்படுகின்றது.

இந்தக் குழுவின் தமிழரசு கட்சியின் ஊடகத்துறைக்குப் பொறுப்பான உதவிச் செயலாளரும் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளருமான ந.வித்தியாதரன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன், கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட கிருஷ்ணப்பிள்ளை சேயோன் ஆகியோர் அடங்குகின்றனர்.

அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பான கொள்கை மற்றும் வழிமுறைகள் என்ற தலைப்பில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்துள்ள பல்வேறு அரசியல் கலந்துரையாடல்களில் இந்த குழுவினர் பங்குபற்றுவர்.

நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை 15 ஆம் திகதி வரை இக்குழுவினர் சீனாவில் தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# கைவிடப்பட்ட வாகனங்கள் 2500 ஒப்படைக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

இறுதிக்கட்ட போர் நடைபெற்றபோது விடுதலைப் புலிகளினால் புதுமாத்தளன் பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டாயிரத்து 500 வாகனங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் வழங்கியுள்ளதாக 68 ஆவது படைப்பிரின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்து வருபவர்கள் மற்றும் சிலருக்கு இந்த வாகனங்களை வழங்கி வருவதாகவும் வாகனங்களின் உரிமையாளர்களால் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் 100 வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (அ-2)

# இவ்வாண்டின் சிறந்த எம்.பியாக ராதிகா சிற்சபைஈசன் தெரிவு



(கொழும்பு)

ராதிகா சிற்சபைஈசன் 2012 இன் சிறந்த பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யபட்டுள்ளார்.

ஸ்காபரோ புதிய ஜனநாயகக்கட்சி இவர் (ஸ்காபரோ -ரூஜ்ரிவர்) நெள சஞ்சிகையால் நேற்று முன்தினம் 2012 இன் சிறந்த உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் விருது வழங்கி மதிப்பளிக்கப் பெற்றார்.

இந்த விருதுக்காக எனக்கு வாக்களித்தவர்கள் ஸ்காபரோ மற்றும் ரொறன்ரோ பெரும்பாக மக்களே எனக் கூறினார்.

ரொறன்ரோவிலிருந்து வாராந்தம் வெளிவரும் நெள என்ற சஞ்சிகை ரொறன்ரோவில் சிறந்தது என்ற பட்டியலை வருடாந்தம் வெளியிடுகிறது.

கடந்த காலத்தில் சிறந்த உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் விருது பெற்றவர்களிலே புதிய ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஜக் லேற்றன், ஒலிவியா செள ஆகியோரும் அடங்குகின்றனர்.

நான் தொடர்ந்தும் ஸ்காபரோ வாழ் மக்களுக்காக குரல் கொடுப்பேன். தரமான சுகநல பாதுகாப்பு, ஓய்வுகால காப்புறுதி, சமத்துவமும் பசுமையும், செல்வச் செழிப்பும் மிக்க தேசம் போன்ற கனேடிய மக்களுக்கு முக்கியமான விடயங்களுக்காக போராடுவேன் என ராதிகா சிற்சபைஈசன் மேலும் கூறினார். (அ-2)

# கொரிய தொழில்வாய்ப்புக்கள் விரயமாக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் 3 ஆயிரம் கொரிய தொழில்வாய்ப்புக்கள் விரயமாகியுள்ளதாக கொழும்பு சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென்கொரியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 3 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் விரயமாகியுள்ளதாக அந்நாட்டுத் தூதுவர் சொய் ஜொன் முன் தெரிவித்துள்ளார்.

தென்கொரிய கோட்டா முறைமையில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கி வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக இலங்கைக்கு அதிகளவு தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

ஏனைய நாடுகளில் சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கைக்கு கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கைக்கு 10 ஆயிரம் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் மொழி, தொழில்நுட்ப அறிவு போன்ற அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் இந்த 10 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களில் 7 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எஞ்சிய 3 ஆயிரம் தொழில்வாய்ப்பு உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என தூதுவர் ஜொன் முன் தெரிவித்துள்ளார். (அ-2)



சங்கானை Butterfly international school நவராத்திரி விழாவை முன்னிட்டு சிறார்களிடையே கலாசாரத்தை பேணும் வகையில் கோலம் போடுதல், மாலை கட்டுதல், பண்ணிசைப் போட்டி ஆகிய போட்டிகளை நடாத்தியது. இப்போட்டியில் வெற்றியீட்டி சான்றிதழ் பெற்றுகொண்ட சிறார்கள் ஆசிரியருடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# ஏமாற்றிய காதலி மீது அசிட் வீசி தாக்குதல்

## காலியில் சம்பவம்

(கொழும்பு)

தன்னை ஏமாற்றியதாகக் கூறி காதலி மீது காதலன் அசிட் தாக்குதல் நடத்திய சம்பவமொன்று காலி உடுகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உடுகமவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த பேருந்தில் வைத்தே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்தில் 26 வயதான யுவதி ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த யுவதி கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அசிட் தாக்குதலினால் பேருந்து நடத்துநரும் மேலும் நான்கு பயணிகளும் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தக் தாக்குதலை நடத்திய நபர் தப்பி சென்றுள்ளதாகவும் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

91

### நாடுகாண் பயணங்கள்

கொழும்பினை வந்தடைந்த போர்த்துக்கேயரை கோட்டை மன்னனிடம் அழைத்துச் சென்றனர். கோட்டை வெகு தொலைவில்



விமலதர்மசூரியன் எனும் கோணப்பு பண்டாரன்- கண்டி மன்னன்

இருப்பதைக் காட்டுவதற்காக சுற்றுப்பாதை மூலம் அழைத்துச் சென்றனர். 1505 நவம்பர் 15 ஆம் திகதி கோட்டை அரண்மனையில் 8-வது பராக்கிரமபாகுவைச் சந்தித்தனர். மன்னனுடன் போர்த்துக்கேயர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். வருடந்தோறும் 400 பகார் (80 மெரிக் தொன்) போர்த்துக்கேயருக்கு வழங்க மன்னன் ஒத்துக் கொண்டான். அதற்குப் பிரதிபலனாக இலங்கையின் கரையோரங்களைப் பாதுகாத்துத் தர போர்த்துக்கேயர் உடன்பட்டனர். எனினும் மிளகு, ஏலம், கராம்பு, கறுவா முதலான முழு வாசனைத் திரவிய வர்த்தகத்தையும் தாமே தனித்துவமாக வைத்திருக்கப் போர்த்துக்கேயர் விரும்பினர். கோட்டை மன்னனின் அனுமதியுடன் கொழும்பில் பண்டகசாலை ஒன்றையும், தேவாலயம் ஒன்றையும் நிறுவிக் கொண்டனர். கொழும்புத் துறைமுகத்திற்கு எதிரில் கல்லொன்றில் போர்த்துக்கேய அரச முத்திரையை லோரன்ஸ் டி அல்மேடா பொறித்து வைத்தான்.

போர்த்துக்கேயர் இந்தியாவிலுள்ள கோவாநகரைத் தம் கீழைத்தேய நாடுகளின் கேந்திர மையமாகக் கொண்டனர். இந்து சமுத்திரத்தில் முக்கியமான துறைமுகங்களைத் தம்வசமாக்கிக் கொண்டு இந்து சமுத்திரத்தில் பிரவேசிக்கும் முஸ்லிம்களின வர்த்தகக் கப்பல்களைச் சூறையாடி வந்தனர்.

அக்கால கட்டத்தில் கோட்டையின் அரசனாக இருந்தவன் வீரபராக்கிரமபாகு ஆவான். அவன் வயோதிபனாக இருந்தமையால் தனது


கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

இராச்சியத்தைத் தன் பிள்ளைகளிடையே பரிபாலிக்கப் பகிர்ந்தளித்திருந்தான். கோட்டைக்குத் தானும், தொந்திராவுக்கு (மாத்தறை) விஜயபாகுவையும், நான்கு கோறளைகளுக்கும் இராஜசிங்கனையும் இறைகமத்துக்கு இன்னொரு மகனையும் ஆட்சியாளர்களாக நியமித்திருந்தான். அத்துடன் உடகம்பளைக்கும் மாதம்பைக்கும் நிர்வாகிகளாகத் தன்னிரு மருமக்களை நியமித்தான். அக்காலத்தில் மலையதேசத்தை விக்கிரமபாகு ஆண்டு வந்தான். மலபாரைச் சேர்ந்த கடற் கொள்ளைக்காரன் ஒருவன் மன்னார் விரிகுடாவில் முத்துச் சலாபத்தைக் கொள்ளையிட முயன்றபோது, அவனை அவ்விடத்திலிருந்து புறமுதுகிடவைத்தவர்கள் உடகம்பளை மாதம்பைப் பிரதேசங்களைச் சேர்ந்த மருமக்களாவர். கண்டி மன்னன் விக்கிரமபாகு கோட்டைக்குத் திறை செலுத்த மறுத்தபோது நான்கு கோறளையை நிர்வகித்த இராஜசிங்கன் கண்டி மன்னனைத் தாக் கிப் பணிய வைத்ததோடு, அவனது மகளையும் கவர்ந்து மணந்து கொண்டான்.

வீரபராக்கிரமபாகு 1509 ஆம் ஆண்டு மரணமடைய கோட்டையின் அரசனாகத் தர்மபராக்கிரமபாகு முடிபுனைந்து கொண்டான். தம்பி விஜயபாகுவால் எதிர்ப்பு வருமென எதிர்பார்த்துப் போர்த்துக்கேயரின் படை உதவியை நாடியிருந்தான். அதற்காகக் கொழும்பில் ஒரு கோட்டையை அமைத்துக் கொள்ளவும் அனுமதியைப்


# போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயருக்கு வழங்கினான். அவ்வேளையில் போர்த்துக்கேயர் வேறு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். இந்து சமுத்திரத்திலிருந்து முஸ்லீம்களை அகற்றும் வேலையிலும், மலாக்கா, ஓமாஸ், ஏடன் ஆகிய வர்த்தகக் கேந்திரத் துறைகளில் பாதுகாப்பாகக் கோட்டைகளைக் கட்டும் பணிகளிலும் கவனம் கொண்டிருந்தனர். 1518 இல் போர்த்துக்கேயரின் அரசபிரதிநிதியாக விளங்கிய தளபதி அல்பேகாரியா என்பவன் கொழும்பில் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டான். 1518 இல் முஸ்லிம்களின் தூண்டுதலால் 6 ஆம் விஜயபாகு, கோட்டை இராச்சியத்தைத் தமையனி டம் இருந்து கவர்ந்து கொண்டான். கள்ளிக்கோட்டை மன்னனான சமேறியனின் படை உதவியுடன் போர்த்துக்கேயரின் கோட்டையைத் தகர்க்க எடுத்த முயற்சி வெற்றியைத்தர வில்லை. தோல்வியின் பின்னர் போர்த்துக்கேயருடன் முரண்படுவதைத் தவிர்த்துக் கொண்டான்.



யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பண்டைய கால மன்னர்களின் மார்பு அணிகலன்

அதன்பின்னர் விஜயபாகு அவனது மூன்று புதல்வர்களால் கொல்லப் பட்டான். கோட்டை இராச்சியம் கோட்டை, சீதாவாக்கை, இறைகம் என மூன்றாகப்பிரிக்கப்பட்டு முறையே புவனேகபாகு, மாயாதுன்னை, மதுமபண்டாரா என்போரால் நிர்வகிக்கப் பட்டது. மதுமபண்டாராவின் இறப்புடன் இறைகம் மாயாதுன்னையின் சிதாவாக்கையுடன் இணைக்கப் பட்டது. புவனேகபாகுவின் பேரன் தர்மாபாலன் மன்னனாக சாட்டுதல் செய்யப்பட்டான். அவனைக் கோட்டையின் இளவரசனாக அங்கீகரித்த போர்த்துக்கேய அரசன் அங்கீகரித்த உருவச் சிலையோடு கத்தோலிக்கக் குருமார்கள் ஐவரையும் சேர்த்து அனுப்பிவைத்தான். இவர்கள் கோட்டையில் கத்தோலிக்க மத வேலைகளை ஆரம்பித்து வைத்தனர். கோட்டை மன்னன் புவனேகபாகு மதம்மாறாமை அவர்களுக்குக் கவலையைத் தந்தது. 1551 இல் மாளிகையில் புவனேகபாகு வீற்றிருந்தபோது போர்த்துக்கேயப் போர்வீரர் ஒருவனால் சுடப்பட்டு மரணமானான். தற்செயலான நிகழ்வாகக் காட்டப்பட்டாலும், அதனைத் திட்டமிட்ட கொலையாகவே கருதலாம். புவனேகபாகுவின் மரணத்தின் பின்னர் தர்மபாலன் அரசனாக முடிபுனைந்ததோடு டொன்யுவான் தர்மபாலன் என தன் பெயரை மாற்றி கிறிஷ்தவ மதத்தையும் தழுவிக்கொண்டான். போர்த்துக்கேயருக்கும் தமது மதத்தைப் பரப்புவதற்கு வாய்ப்பானது. அதனை விரும்பாத விதிய பண்டார எதிர்த்துப் பிரச்சாரம் செய்தான் அங்குமிங்குமாக கட்டப்பட்டிருந்த கத்தோலிக்க தேவாலயங்களை அழிப்பதில் ஈடுபட்டான் மக்களை போர்த்துக்கேயருக்கு எதிராகத் தூண்டிவிட்டான். எனவே கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு இடைஞ்சலாக விளங்கிய தந்தை விதிய பண்டாராவை கைது முயன்றபோது அவன் தலைமறைவாகி யாழ்ப்பாண இராச்சியத்திற்கு தப்பியோடிப்போனான். அங்கு நிகழ்ந்த விபத்தொன்றில் அகால மரணமானான். 1597 இல் தர்மபாலன் மரணமானதும் போர்த்துக்யேர் கோட்டை அரசின் உரிமையாளராக மீறினர். தர்மபால ஏற்கனவே ஒரு நன்கொடை உறுதியைப் போர்த்துக்கேயருக்கு வழங்கியிருந்தான். தனக்குப்பின்னர் கோட்டை போர்த்துக்யேருக்கு உரிமையானது என அந் நன்கொடை உறுதி கூறியது.



விஜயபாகு மன்னனின் கொலைச் சம்பவத்தைச் சித்தரிக்கும் சித்திரம்

தர்மபாலனின் மரணம் நடந்ததும் போர்த்துக்கேய தளபதி ஜெரணிமோ டி அல்விடோ சிங்களப் பிரதானிகளை மல்வானைக்கு அழைத்து மல்வானை ஒப்பந்தம் செய்துகொண்டான். தர்மபாலனுடன் செய்துகொண்ட நன்கொடை உறுதியின்படி இனிமேல் கோட்டையின் ஆட்சி உரிமை தமக்குரியதென்றும் போர்த்துக்கல் மன்னனுக்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும்தெரிவித்தான். நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கிணங்க நிர்வாகம் நடைபெற வேண்டும் என சிங்களப்பிரதானிகள் கேட்டுக்கொண்டனர். ஒப்புக்கொள்ளப்பட்டது. 1597 ஆம் ஆண்டு கோட்டை போர்த்துக்கேயருக்கு உடமையானது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உயிரோடு இருக்கும் போதே...

வயலூர் என்ற ஊரில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் குழந்தை ஏதும் இல்லை. ஏராளமான செல்வம் இருந்தும் ஒரு காசு பிறருக்கு ஈயாத கருமியாக இருந்தான் அவன்.

ஊர்மக்கள் இவ்வளவு செல்வத்தை வைத்துக்கொண்டு இவன் என்ன செய்யப் போகிறான்? அனுபவிக்கக் குழந்தைகளா உள்ளன? ஏழைய எளியவர்களுக்குச் சிறிதளவு கொடுத்து உதவினால் என்ன? என்று அவனைப் பற்றிப் பேசிக் கொண்டனர். இதைக்கேட்டு வருந்தினான் அவன். அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்தார்.

அவரை வணங்கிய அவன் ஐயா! நான் செல்வந்தன். எனக்குக் குழந்தைகள் இல்லை. நான் இறந்த பின்பு என் செல்வம் பல்வேறு நல்லசெயல்களுக்குப் பயன்படப் போகிறது. இந்த ஊரில் உள்ளவர்களுக்கும் அது தெரியும். இருந்தும் அவர்கள் என்னைக் கருமி என்று குறை சொல்கின்றனர். என்னால் தாங்கமுடியவில்லை! என்று வருத்தத்துடன் சொன்னான்.

அதற்கு அவர் நான் ஒரு கதை சொல்கிறேன். அதைக் கேளுங்கள். பின்பு அவர்கள் உங்களைக் குறை சொல்வது



நியாயமா இல்லையா என்று சொல்லுங்கள் என்றார்.

கதையைச் சொல்லுங்கள் என்றான் அவன்.

பசு ஒன்றும் பன்றி ஒன்றும் வயல்வெளியில் தற்செயலாகச் சந்தித்தன. பசுவிடம் பன்றி எல்லோரும் உன்னைப் புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால் யாருமே என்னைப் புகழ்வது இல்லை. நீ நாள்தோறும் அவர்களுக்குப் பால் தருகிறாய். என்னால் அவர்களுக்கு இப்போது பயன் இல்லாமல் இருக்கலாம். இறந்த பின்பு நான் அவர்களுக்கு உன்னைவிட அதிகம் பயன்படப் போகிறேன்.

என் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விட்டு வைக்கப் போவது இல்லை. எல்லாவற்றையும் சுவைத்துச் சாப்பிடப் போகின்றனர். இப்படி அவர்களுக்குப் பயன்படப் போகும் என்னை இகழ்கின்றனரே ஏன்? என்று வருத்தத்துடன் கேட்டது.

அதற்குப் பசு, பன்றியே! நான் உயிருடன் இருக்கும் போதே அவர்களுக்குப் பயன்படுகிறேன். அதனால் அவர்கள் என்னைப் புகழ்கின்றனர் என்றது. செல்வனே! எல்லோரும் உங் களைக் குறை சொல்லும் காரணம் இப்போது புரிந்து இருக்குமே... என்றார் அவர்.

துறவியாரே என் தவறை உணர்ந்துவிட்டேன். உயிருடன் இருக்கும்போதே என்னாலான உதவியைப் பிறருக்குச் செய்வேன் என்ற அவன் அவரை வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

---

ஓர் ஊரில் அறிஞர் ஒருவர் இருந்தார். அறிவு நிரம்பிய அவர் யார் எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும் அதற்குச் சரியாக பதிலைச் சொல்வார். வாதத்திறமை மிகுந்திருந்த அவர் பல நாடுகளுக்குச் சென்றார். யாராலும் அவரை வாதிட்டு வெல்ல முடியவில்லை. அவர் புகழ் உலகெங்கும் பரவியது. தற்பெருமை மிகுந்த அவர் ஒரு நாட்டுக்குவந்தார். அரசவைக்கு வந்த அவரை அரசன் சிறப்பாக வரவேற்றான்.


உலகம் போற்றும் அறிஞரே! விலையுயர்ந்த இந்த முத்து மால்லயை என் அன்புப் பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தந்தான்.

பரிசைப் பெற்றுக்கொண்ட அவர் இங்கு என் அறிவுத் திறமையைக் காட்டவே வந்தேன். என்னுடன் போட்டியிட்டு வெல்லும் அறிஞருக்கு இந்த முத்து மாலையை நான் பரிசாகத் தருகிறேன். இங்கே என்னுடன் போட்டியிடுபவர் யார்? என்று ஆணவத்துடன் கேட்டார்.

அந்த அவையே அமைதியில் ஆழ்ந்திருந்தது. என்னுடன் போட்டியிட யாரும் இல்லையா? அறிஞர்கள் நிறைந்த நாடு என்று கேள்விப்பட்டுத் தானே இங்கு வந்தேன் என்று கேலி பொங்கக் கேட்டார் அவர்.

தன் நாட்டின் பெருமை குலைவதை விரும்பாத அரசன் எழுந்தான். அவையில் இருந்த அறிஞர்களைப் பார்த்து உங்களில் யார் போட்டியில் கலந்து கொள்கிறீர்கள் என்று கேட்டான்.

எல்லோரும் தலை கவிழ்ந்த படி இருந்தனர். அவமானத்தால் அரசனின் முகம் சிவந்தது. அரசே! நான் இந்த அறிஞருடன் போட்டியிடுகி




றேன் என்று எழுந்தான் அரண்மனைக் கோமாளி.

என்ன நீயா? என்று வியப்புடன் கேட்டான் அரசன்.

ஆம் அரசே! நான் இந்த அறிஞரை ஆறு கேள்விகள் கேட் பேன். எல்லாவற்றிற்கும் இவர் தவறாக பதிலையே சொல்ல வேண்டும். சரியான பதிலைச் சொன்னால் தோற்றவர் ஆவார். இந்தப் போட்டிக்கு இவர் உடன்படுகிறாரா? கேளுங்கள் என்றான் கோமாளி.

நீ கேட்கும் ஆறு கேள்விகளுக்குத் தவறான பதில் சொல்ல வேண்டும். அவ்வளவதானே. எவ்வளவு எளிமையான போட்டி. இப்படிப் பட்ட போட்டியை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை! என்றார் அவர்.

போட்டி தொடங்கலாம்! என்றான் அரசன்.

நாம் அரசவையில் தான் இருக்கிறோம்

*இல்லை!*

அரியணையில் அமைச்சர் அமர்ந்திருக்கிறார்!

*ஆமாம்!*

உம் புகழ் பல நாடுகளிலும் பரவியுள்ளது!

*இல்லை!*

அரசர் உமக்குப் பரிசாகக் கொடுத்தது வெள்ளி நகை!

*ஆமாம்!*

இதுதானே நமக்கிடையே நடக்கும் போட்டி எதற்கும் தவறான பதிலையே சொல்ல வேண்டும்!

*இல்லை!*

ஆ எவ்வளவு பெரிய அறிஞர் நீர் நான் ·எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும் நீர் தவறான பதிலையே சொல்கிறீர். நான் உம்மை எத்தனை கேள்விகள் கேட்டேன்!

ஐந்து கேள்விதான் முடிந்துள்ளது. நான் வெற்றிபெற இன்னும் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்று ஆணவத்துடன் சொன்னார் அவர்.

வெற்றி உமக்கா? எனது கடைசிக் கேள்விக்குச் சரியான பதில் தந்து தோல்வி அடைந்து விட்டீரே! என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

ஆ! எவ்வளவு எளிதில் ஏமாந்து விட்டோம். என் தற்பெருமையே எனக்குத் தோல்வியைத் தந்தது! என்று வருந்தினார் அவர்.

விலையுயர்ந்த முத்துமாலையைக் கழற்றி கோமாளியிடம் தந்தார் அவர்.

பின்னர் தலைகவிழ்ந்தபடி அங்கிருந்து வெளியேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்த மின்சாரத்திற்கான தேவை 30 வீதத்தால் குறைவு

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

அதிக மழை காரணமாக நாளாந்த மின் சாரத்திற்கான கேள்வி 30 சதவீதமாக குறைந்துள்ளதென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

குளிர் மற்றும் மின்னல் தாக்க கால நிலையால் குளிர்சாதன இயந்திரம் மற்றும் மின் உபகரணங்கள் பாவனை குறைந்தமை, தொலைக் காட்சி போன்றவற்றின் பாவனை குறைந்தமை இதற்கான காரணம் என அச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அதிக மழை காரணமாக காசல்ரீ, மவுசாகல்ல மற்றும் மேல்கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளபோதும் சமணலவெவ மற்றும் ரந்தெனிகல ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 30 சதவீதமாகவே காணப்படுவதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# நாவலர் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 133 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி என்பன யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறுமென சைவ பரிபாலனசபை கௌரவ செயலாளர் தி.மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் அன்றையதினம் உரிய நேரத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் போட்டியாளர்களுக்கான சுட்டெண் அன்றையதினம் வழங்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இரு கைத்தொலைபேசிகளை விழுங்கிய சந்தேக நபர்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள் இரண்டை விழுங்கியதாகக் கூறப்படும் சிறைக்கைதி ஒருவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த சம்பவமொன்று அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த புலிச் சந்தேக நபர் ஒருவரை வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கொன்றுக்காக அழைத்துச் சென்று மீண்டும் அநுராதபுரத்துக்கு அழைத்து வந்த போதே மேற்படி கையடக்கத் தொலைபேசிகள் இரண்டையும் அவர் விழுங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வயிற்றுக்குள்ளிருந்த கையடக்கத் தொலைபேசிகளில் ஒன்று அலறிய போது அவரது வயிற்றிலும் தொண்டைப் பகுதியிலும் வேதனை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி சந்தேக நபர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

# பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்கத்தயார்- சுரேஷ் எம்.பி.

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கட்சியினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமான பதில்களை வழங்கினால் தெரிவுக்குழுவில் பங்கேற்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வெளிவிவகாரம் மற்றும் நிதி அதிகாரங்கள் தவிர்ந்த காணி, பொலிஸ்துறை உள்ளிட்ட சகல அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்ட போதிலும் மத்திய அரசாங்கத்திற்கே கூடுதல் அதிகாரங்கள் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளினால் பயன்படுத்த முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வு வழங்காவிட்டால் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்திற்கு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாமை குறித்து அறிவிக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## இந்திய துணைத்தூதரகம் இடமாற்றம்

இந்தியத் துணைத் தூதரகம் கடந்த முதலாம் திகதி முதல் புதிய இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய இதுவரை காலமும் இல 280, பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த இந்தியத் துணைத் தூதரகம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இல. 14, மருதடி ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு சேவையினை நடத்த தொடங்கியுள்ளது.

அத்துடன் தொலைபேசி இலக்கம் மற்றும் தொலை நகல் இலக்கம் ஆகியவற்றில் எதுவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்திய துணைத் தூதரகத்தின் தொலைபேசி இலக்கங்களான 021 222 0504, 021222 0505 ஆகிய இலக்கங்களுடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியும். இந்திய விசாவிற்கு விண் ணப்பிக்க விரும்புவர்கள் இல. 89, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் வீ. எவ்.எஸ். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியு மென இந்தியத் துணைத் தூதரகம் கேட்டுள்ளது. (அ-2)

# சமாதானத்திற்கான சர்வமத கலாசார சர்வதேச மாநாடு

(கொழும்பு)

சமாதானத்திற்கான சர்வமத கலாசார சர்வதேச மாநாடு நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் யுனெஸ்கோ தலைவர் டாக்டர் கதலின் பொக்யாய் உட்பட 600 வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்க இருப்பதாக மத கலாசார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் வண போதாகம சந்திம தேரர் தெரிவித்தார்.

தகவல் ஊடக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்கள் பலர் பங்கேற்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வெளிநாட்டு குழுவொன்று சமாதான நோக்கில் இலங்கை வருவது மிக முக்கியமானதாகும். இலங்கையில் அமைதி நிலை ஏற்பட்டுள்ளமையால் உலக சமாதானத்திற்காக இந்த மாநாட்டை இங்கு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பௌத்த மதம் உட்பட ஏனைய மதங்களை இணைத்து இந்த மாநாடு நடைபெறுகின்றது.

வெளிநாட்டுக்குழு ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்துள்ளது. இன்றையதினம் மாணல்வத்தை விகாரையில் மாநாடொன்று நடக்கவுள்ளதோடு நாளை சின்மன்ட் கிரேண்ட் விடுதியில் முழு நாள் பிரதான மாநாடு நடைபெறும் என்றும் தேரர் தெரிவித்தார். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1333- ஆர்னோ ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் பரவியதில் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் பெரும் சேதம் ஏற்பட்டது.

1576-ஸ்பானியப் படைகள் பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரைக் கைப்பற்றின. மூன்று நாட்களில் இந்நகரம் பெரிதும் சேதப்படுத்தப்பட்டது.

1861-வோஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1869-அறிவியல் இதழ் நேச்சர் முதற் தடவையாக வெளியிடப்பட்டது.

1914-பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.

1918-முதலாம் உலகப்போர்: இத்தாலியிடம் ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு சரணடைந்தது.

1918- 40 ஆயிரம் கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜேர்மனியப் புரட்சி ஆரம்பமாகியது.

1921-ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஷி டோக்கியோவில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

1956-ஒக்டோபர் 23இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் உயிரிழந்து இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.

1966-இத்தாலியின் புளோரன்ஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப்பெருக்கில் அழிந்தது. 113 பேர் உயிரிழந்தனர். பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.

1967-எம்.ஜி.ஆர்.கொலைமுயற்சி வழக்கு: நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் கொலைமுயற்சி வழக்கில் நடிகர் எம்.ஆர்.ராதாவுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

1979-ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

1984-நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.

1995-இஸ்ரேலியப் பிரதமர் இட் சாத் ரபீன் தீவிரவாத வலதுசாரி இஸ்ரேலியரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

2004-ஐவரிகோஸ்ட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா. கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.


### இறப்புக்கள்

1988-ஜேம்ஸ் இரத்தினம், ஈழத்து எழுத்தாளர் (பி.1905)

1995-இட்சாக் ரபீன், இஸ்ரேல் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அமெரிக்காவும் சாண்டி புயலும்

## புவி வெப்பமடைதலின் விளைவு

## வரலாறு காணாத சேதங்கள்...!

இத்தனை ஆண்டுகாலம் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய புயல்கள் உருவாகிவருவதற்குக் காரணம், புவிவெப்பமடைதலே அல்லது குளோபல் வாமிங்கினால் ஏற்படும் வானிலை மாற்றம், கடல் நீர் மாற்றம் ஆகியவையே என்று விஞ்ஞானிகள் சுமார் 30 ஆண்டுகாலமாக கதறி வருகின்றனர். ஆனால், அமெரிக்காவிலும் சரி எந்த நாட்டிலும் சரி எந்த அரசியல்கட்சிகளும் விஞ்ஞானிகளின் இந்த எச்சரிக்கையை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. 2005 ஆம் ஆண்டு அமெரிக்காவை புரட்டிப்போட்ட காத்ரீனாவாகட்டும் அல்லது ஜரீனாவாகட்டும் தற்போது மிக முக்கிய நகரங்களை நிலைகுலையச் செய்து அமெரிக்காவின் வரலாறு காணாத



சேதங்களை ஏற்படுத்திய சாண்டிப்புயலாகட்டும் அனைத்தும் புவி வெப்பமடைதல் என்ற மனித நடவடிக்கையின் விளைவுகளே என்பதை யாரும் ஒப்புக்கொள்ளவதில்லை. கண்டும் காணாததுபோல் இருக்க பழகிவிட்டோம். நுரையீரல் புற்றுநோய்க்கு புகைப் பிடிப்பது எப்படி, அமைப்பு ரீதியான காரணமோ அப்படித்தான் மிகப்பெரிய புயல்களுக்குக் காரணம் புவி வெப்பமடைதலே. இது மானுட உற்பத்தி நடவடிக்கைகளால் ஏற்படுவதே.

புவி வெப்பமடைவதால் மெக்சிக்கோ வளைகுடா மற்றும் அத்லாந்திக் கடல் நீரை உஷ்ணப்படுத்தியுள்ளது. இதனால், காற்றில் நீராவியின் அளவும் சக்தியும் அதிகரிக்கிறது. இது ஏற்பட்டுவிட்ட நிலையில் ஈரமான இராட்சதப் புயல் காற்றுகள் தவிர்க்க முடியாதவையாகிவிடுகிறது. இந்த சிஸ்டமிக் காரண ங்கள்தான் சாதாரண புயல், சாண்டி, ஜரின், காத்ரீனா அளவுக்கு இராட்சத புயலாக மாறுவதற்குக் காரணம். புவி வெப்பமடைவதால் ஒவ்வொரு நாளும் உருவாகும் கூடுதல் சக்தி 4இலட்சம் ஹீரோசீமா அணு குண்டுகளுக்கு சமமானது என்றே விஞ்ஞானிகள் கூறிவருகின்றனர். பூமி என்ற நம் கணக்கிட முடியாத இந்தப் பரப்பளவு மற்றும் ஆழத்தில் புவி வெப்பமடைதலின் விளைவுகளை நம் உடல் நேரடியாக உணர வாய்ப்பில்லை.

பனிப்பாறைகள்புவிவெப்பமடைவதால் உருகும்போது, கடல் நீர் மட்டம் 45 அடி உயரும். இதனால் அதிக உஷ்ண நீர் பரப்பளவு அள வில் கடற்பரப்பில் சேரும் போது சாதாரண புயல்கள் கூட இராட்சத புயலாக உருமாறு கிறது.

2 டிகிரி செல்சியஸ், பூமி அதிகம் வெப்பமடைந்தால் கூட போதுமானது; இந்த மனித குலதிற்கே இது பேரழிவாகப் போய் முடியும். 2 டிகிரி செல்சியஸ் என்பது ஒன் றும் பெரியவிடயமல்ல, எக்சான் எண்ணெய் நிறுவனம் அமெரிக்காவில் தோண்டும் கச்சா எண்ணெயின் அளவு போதுமானது. அந்த கச்சா எண்ணெய் பெற்றோலாக மாறி எரிக்கப்படும்போது 2 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரிக்கும் அவ்வள்வுதான்.

இதுவெறும் எக்சான் மொபில் நிறுவன எண்ணெய் மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து எண்ணெய் நிறுவனங்களும் சேமித்து வைத்துள்ள எண்ணெய் எரிக்கப்படும்போது இந்தப்பூமியின் வெப்பநிலை என்னவாக இருக்கும் என்பதை யோசிக்க முடியுமா என்றே தெரியவில்லை. ஏற்கனவே உள்ள எண்ணெய் வளம் போதமானது. இருக்கும் எண்ணெயையே முழுதும் எரிக்கமுடியாது. இதில் மேலும் மேலும் கச்சா தோண்டுவது ஏன்?

18 ஆம் நூற்றாண்டின் பிரெஞ்ச் புத்தொளிவாத தத்துவஞானி *ழாக் ரூசோ* கூறியது போல், பூமிக்கு மேற் பரப்பில் இயற்கை நமக்கு எவ்வளவோ கொடுத்துள்ளது. அது அத்தனையின் பயன்களையும் நாம் அறிந்து விட்டோமா, எதற்குப் பூமியைத் தோண்ட வேண்டும்? பூமியைத்தோண்ட ஆரம்பித்தான் மனிதன்; அவனது அழிவு ஆரம்பமாகிவிட்டது என்றார். இன்று அவரது சிந்தனையை மேலும் தீவிரமாக நாம் யோசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம் என்றால், மிகையாகாது. பிரபல சூற்றுச்சூழல் விஞ்ஞானி ராபர்ட் ஹேரன் சென் கடந்த சில ஆண்டுகளின் அதி தீவிர வெப்ப நிலைக்குக் காரணம் புவி வெப்பமடைதலைத் தவிர வேறொன்றுமில்லை என்கிறார். மேலும் 2012 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட வெப்ப அலை டெக்சாசில் மிகப் பெரிய வறட்சியையும் ஒக்லஹாமவில் 2011 இல் கடுமையான வரட்சியையும் உருவாக்கியது என்கிறார் ஹேரன் சென். ஒரு குறிப்பிட்ட இயற்கைச் சீற்றத்தை புவி வெப்பமடைதலுடன் இணைத்துக் காண்பதற்கு நிரூபணம் இல்லாவிட்டாலும் பெரிய அளவில் புவி வெப்பமடைதலின் சிறிய விளைவுகளே இது என்று ஹேரன்சென் கூறுவது சிந்திக்கத்தக்கது.

சயின்டிபிக் அமெரிக்கன் என்ற ஆய்வு பத்திரிகை தொடர்ந்து மிகப்பெரிய புயல், வறட்சி, காட்டுத் தீ போன்றவற்றைப் பற்றி கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. 2007 ஆம் ஆண்டே அட்லாண்டிக் கடற்பகுதி உஷ்ணமடைந்து வருவதால் அதிக புயல்கள் உருவாகாவிட்டாலும் உருவாகும் புயலும் ராட்சத புயலாக மாறும் என்று எச்சரித்திருந்தனர். எனவே இன்னும் அரசுகள் கண்ணை மூடிக் கொண்டு அனைத்தையும் புவி வெப்பமடைதலுடன் தொடர்புபடுத்த முடியாது என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதில் எந்த வித அர்த்தமும் இல்லை. இங்கு இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். அமெரிக்காவை தாக்கினால் ஆகா ஓகோ என்று ஊடகங்கள் அனைத்தும் கச்சைக் கட்டிக் கொண்டு இறங்குகின்றன. இன்றைய புவி வெப்பமடை தலுக்கு முதன்மை பங்களிப்பு செய்து வரும் அமெரிக்கா போன்ற நாடுகளின் உற்பத்தி நடவடிக்கைகளினால் ஏழை ஆப்பிரிக்கநாடுகளின்பசி, பஞ்சம், பட்டினி, வறுமை, வறட்சி ஆகி யவை பற்றி 24 மணி நேர சேவை எதுவும் காண்பிக்கப்படுவதில்லையே ஏன்?

சாண்டி புயலால் நியூயோர்க், நியூஜெர்சி, பென்சில்வேனியா, மேரிலாண்ட் உள்பட 12 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன. தலைநகர் வாஷிங்டன், பால்ட்டிமோர், பிலடெல்பியா உள்ளிட்ட நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. புயல் கரையைத் தொட்ட அட்லாண்டிக் சிட்டியில் நிலைமை மிகமோசம்.

சாண்டி புயல் அமெரிக்காவில் இதுவரை 39 பேரை பலி கொண்டுள்ளது. சுமார் 5 கோடி பேரின் அன்றாட வாழ்க்கையை கடுமையாக பாதித்துள்ளது. 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. அமெரிக்காவின் வடகிழக்கு கடலோர நகரங்களில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

உலகில் அதிகம் பேர் பயன்படுத்தும் நியூயோர்க்கில் உள்ள கென்னடி சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது. எயர் இந்தியா உள்ளிட்ட சுமார் 15 ஆயிரம் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. 125 ஆண்டுகளுக்குப் பிறகு நியூயோர்க் பங்குசந்தை தொடர்ந்து இரண்டாவது நாளாக செயற்படவில்லை. இதுவரை சுமார் இரண்டரை இலட்சம் கோடி ரூபா அளவிற்கு சேதத்தையும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ள சாண்டி புயல் அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் மேலும் பாதிப்பை உருவாக்க வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க சூறாவளி கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

**பேராசிரியர்-பி.எம்.ஹெய்ட்**

**சாண்டியால் அமெரிக்காவுக்கு 2.5 இலட்சம் கோடி ரூபாஇழப்பு**

அமெரிக்காவை அச்சுறுத்திவரும் சாண்டிபுயல் அங்குள்ளகிழக்கு கடலோரப்பகுதியை நாசப்படுத்தியுள்ளது. இந்த புயலால் 15 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான *சாண்டி* புயல் அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் 130 கிலோ மீட்டர் வேகத்தில் கரையைக் கடந்தது. அப்போது பலத்த காற்று வீசியதுடன் கனமழையும் பெய்தது. சுமார் 14 அடி உயரத்திற்கு அலை எழும்பியதால் கடல் நீர் நகரங்களுக்குள் புகுந்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை அபிவிருத்தியில் பாரபட்சம் காட்டப்படுவதில்லை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அபிவிருத்தி செய்யப்படுவதற்காக மாகாண வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டியதில்லை. மாகாண, மத்திய என்றில்லாமல் அனைத்தையும் ஒரேவிதமாக அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் நோக்கமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

மத்திய களஞ்சியசாலைகளிலிருந்து பிரதேச வைத்தியசாலைகளுக்கு மருந்து விநியோகிக்கையில் ஏற்படும் தாமதத்தின்போது கூட முழு இலங்கையிலும் குறிப்பிட்ட மருந்துக்கு தட்டுப்பாடு என பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட்டால் இத்தகைய குறைபாடுகளை சரி செய்ய முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் ஆயிரத்து 47 அரசாங்க வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றில் 47 மத்திய அரசின் கீழும் ஆயிரம் வைத்தியசாலைகள் மாகாணசபை நிர்வாகத்தின் கீழும் உள்ளன. எனினும் அவற்றிற்கான அபிவிருத்தி மற்றும் சேவைகளை வழங்குவதில் மத்திய அரசு, மாகாண நிர்வாகம் என்றில்லாமல் சகலதும் ஒரேவிதத்திலேயே நோக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மாகாண சபையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று நேரில் பார்வையிடுவேன். இச் சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் சிலர் மாகாணசபை வைத்தியசாலைகளை அரசாங்கம் சுவீகரித்து அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் கேட்டனர்.

எனினும் நாட்டின் எந்தவொரு வைத்தியசாலையும் அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசாங்கம் சுவீகரிக்க வேண்டியதில்லை. அவ்வாறான எத்தகைய எதிர்பார்ப்பும் எம்மிடமில்லை.

சகல வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நோயாளிகளுக்கு முன்னுரிமையளிப்பதற்காகவே வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

நான் சுகாதார அமைச்சராக பதவியேற்றதும் மாகாண சுகாதார அமைச்சர்களுக்கு எனது அதிகாரத்தில் ஒரு பகுதியை பகிர்ந்து கொடுத்ததன் நோக்கம் அதுவே. மாகாண வைத்தியசாலைகளும் சமமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்காகவே அதனைச் செய்தேன் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## பிரதமர் நாடு திரும்புவார்

(கொழும்பு)

சுகவீனம் காரணமாக அமெரிக்க வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் பிரதமர் டி.எம்.ஜயரத்ன அடுத்த வாரம் இலங்கை திரும்பவுள்ளதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தற்போது முழுமையாக குணமடைந்துள்ளதால் அவர் நாடு திரும்பியதும் தனது கடமைகளை பொறுப்பேற்பார் எனவும் அலுவலகம் கூறியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பிரதமர் வெளிநாட்டில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதுடன் நாடாளுமன்றமும் அவருக்கு மூன்று மாதம் விடுமுறை வழங்கியது. (அ-2)

## நவுறு தீவுச் சூழலில் மிருகமே வசிக்க முடியாது

### புகலிட கோரிக்கையாளர்கள் கதறல்

அவுஸ்திரேலியாவின் நவுறு தீவு புகலிடக் கோரிக்கையாளர் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் 276 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் இடம்பெற்று வருவதாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

நவுறுதீவில் தங்கவைக்கப்பட்ட ஈரானிய பிரஜை ஒருவர் கடந்த 22 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானிய பிரஜை ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் நவுறு முகாம் பைத்தியக்கார வைத்தியசாலையை போன்று இருப்பதாக அங்கிருந்து தொலைபேசி மூலம் ஒருவர் அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

இந்த முகாம்களில் மிருகங்கள் கூட வசிக்க முடியாது என்றும் தாம் சமூக இணையத்தளமான பேஸ்புக்கின் ஊடாக அவுஸ்திரேலிய மக்களுக்கு நிலைமைகளை புரிய வைக்க முயற்சிப்பதாக அந்தப் புகலிடக் கோரிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

சொந்த நாட்டில் சித்திரவதைகளுக்கு உள்ளான தாம் அவுஸ்திரேலியாவில் பைத்தியம் ஆகிக் கொண்டிருப்பதாக குறித்த புகலிடக்கோரிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மஸ்கெலியா சாமி மலையிலும் 171 குடும்பங்கள் இடப்பெயர்வு

சீரற்ற காலநிலையினால் மஸ்கெலியா சாமிமலை பிரதேசத்தில் 32 குடும்பங்களை சேர்ந்த 171 பேர் இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள இவர்களுக்கு அவசர நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் வீசிய பலத்த காற்றினால் தொழிலாளர்களின் குடியிருப்புக்களின் கூரைத்தகடுகள் காற்றினால் அள்ளுண்டு சென்றதை தொடர்ந்து குடியிருப்பாளர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (அ-2)

## மாணவர்களின் இடைவிலகலை குறைக்க திட்டம்-அமைச்சர் பந்துல

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலை குறைப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை கொண்டுவரவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

இலங்கையில் ஆண்டுதோறும் 2 இலட்சம் பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து விலகுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம் கூறியுள்ளது.

அறிவு அடிப்படையான பொருளாதாரம் என்ற இலட்சியத்தை அடைவதற்கு பிள்ளைகள் தமது பாடசாலை கல்வியை முழுமையாக பூர்த்தி செய்வது அவசியமான நிபந்தனையாகும் என அமைச்சர் கூறினார்.

உலக வங்கி நிதி வழங்கும் கல்வியின் பண்பு தரத்தை முன்னேற்றும் திட்டத்தினூடாக தரம் 11 வரையான பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுவது குறைக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

பாடசாலையை விட்டு விலகியுள்ளவர்களுக்காக 3 ஆயிரம் குறுங்கால தொழிற்பயிற்சி பாடநெறிகளும் சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய ஆயிரத்து 800 பயிற்சி திட்டங்களும் நடத்தப்படவுள்ளன என அவர் கூறினார். (அ-2)

## பள்ளிவாசல் தாக்குதலில் 10 இற்கு மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

குருநாகலை தெலும்புகல்ல பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசலை 60 பேர் கொண்ட குழுவினர் உடைத்து அங்கு தொழுகை நடத்தியோர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இரு மார்க்கக் குழுக்களிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடே இத்தாக்குதலுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.


இத்தாக்குதலின் போது காயமடைந்த 10 இற்கும் மேற்பட்டோர் ரிதிகம மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பழைமைவாய்ந்த ஜும்ஆப் பள்ளி வாசலுடன் முரண்பட்டுக் கொணடு பிரிந்து சென்ற அணியினர் புதிய ஜும்ஆப் பள்ளி வாசலை ஆரம்பித்துள்ளனர். பின்னர் நீதிமன்றத்தில் இரு சாராருக்கிடையே இது குறித்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிமன்றம் புதிய பள்ளி வாசலை சார்ந்த குழுவினருக்கு தொழுகையை மேற்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கியது.

இதனையடுத்து புதிய பள்ளியில் இந்த அணியினர் தொழுகையை மேற்கொண்டிருந்த போது அங்கு வந்த மற்றுமொரு குழுவினர் இத்தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்ததுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஓமான் வெளிவிவகார அமைச்சர் யூசுப் பின் அலவி பின் அப்துல்லாஹ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைப் படத்தில் காணலாம்.

## பெற்றோலிய கூ.தாபனத்துக்கு 60 மில்லியன் டொலர் நட்டம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 60 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஹெஜிங் ஒப்பந்தம் தொடர்பான வழக்கில் அமெரிக்க மத்தியஸ்தர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட வங்கிக்கு சார்பாக தீர்ப் பளித்ததால் இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்திற்கு இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாண்டி புயலின் தாக்கம் காரணமாக அமெ.வில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு



அமெரிக்காவில் சாண்டி புயல் பாதித்த பகுதிகளில் கடும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் கடந்த வாரம் மையம் கொண்ட சாண்டி புயல் 15 மாகாணங்களை தாக்கியதில் 80 இற்கும் அதிகமான மக்கள் பலியாகி உள்ளனர். இதனால் வீதிகள் மற்றும் சுரங்க புகையிரதப் பாதைகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் போக்குவரத்து முழுமையாக ஆரம்பமாகவில்லை.

மேலும் அமெரிக்காவின் பல நகரங்களில் 40 இலட்சம் பேர் மின்சாரம் இன்றி தவிக்கின்றனர். பொலிஸ் நிலையங்கள் உட்பட அலுவலகங்களும் வர்த்தக நிறுவனங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டு வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் போதிய ஆட்கள் நடமாட்டம் இல்லாததால் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நியூயோர்க் பொலிஸார் 19 பேரை கைது செய்துள்ளனர்.

வீதிகள் பழுதுபட்டுள்ளதால் நியூயோர்க் மற்றும் நியூஜெர்சி உள்ளிட்ட இடங்களுக்கு கடந்த சில நாட்களாக பெற்றோல் விநியோகம் செயற்படவில்லை.

இதனால் இந்த பகுதிகளில் கடும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெற்றோல் நிலையங்களிலும் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு மக்கள் வரிசையில் காத்திருந்து கான்களில் பெற்றோல் வாங்கி செல்கின்றனர். (அ-2)

# அரச படையினரை கொடுமையாக கொல்லும் புரட்சிப் படையினர்

## இணையத்தில் வீடியோ வெளியானது

(டமாஸ்கஸ்)

சிரியாவின் அரசுப் படையினரை புரட்சிப் படையினர் மிக கொடுமையாக தாக்கி கொல்லும் வீடியோ இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சிரியாவின் வடக்கு பகுதியில் அரசு படையினரின் சோதனை சாவடி ஒன்றை பதுக்கி அங்கிருந்தவர்களை பிடித்து போராட்ட படையினர் அவர்களை சுட்டுக் கொல்கின்றனர்.

அதன்பின் கோபமடைந்து அல்லாஹு அக்பர் என்று கோசமிட்டபடி தரையில் கிடந்த கைதிகளை உதைப்பதும் பின்னர் இயந்திரத்துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்க சடலக்குவியல் ஒன்று காட்டப்படுவதுமாக இந்த வீடியோ அமைந்துள்ளது.

இந்த வீடியோ உண்மையா என்பது விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அப்படி உண்மையாக இருந்தால் போர்க்குற்றம் ஒன்றின் ஆதாரமாக இது அமையும் என்றும். ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# முஸ்லீம்களை இழிவுபடுத்தியதால் அமெ.வை சாண்டி புயல் தாக்கியது

## மதத்தலைவர்கள் கருத்து

முகமது நபியை இழிவுபடுத்தி திரைப்படம் எடுத்த காரணத்தினால் தான் அமெரிக்காவை சாண்டி புயல் தாக்கியதாக முஸ்லிம் தலைவர்கள் டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் மதத்தையும் முகமது நபியையும் இழிவுபடுத்தி கலிபோர்ணியாவை சேர்ந்த நபரொருவர் The Innocence of Muslim என்ற பெயரில் படமொன்றை எடுத்தார்.

இப்படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் முஸ்லிம் நாடுகளில் போராட்டங்களையும் வெடிக்க வைத்தது.

இந்நிலையில் முகமது நபியை அவமானப்படுத்தியதால் தான் அமெரிக்காவை சாண்டி புயல் தாக்கியதாக முஸ்லிம் தலைவர்கள் டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

எகிப்துவை சேர்ந்த மத தலைவர் வாக்தி கொமீன் டுவிட்டரில் தெரிவிக்கையில், அமெரிக்காவை ஏன் புயல் தாக்கியது என்று சிலர் வியக்கின்றனர். நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியதால் தான் இறைவன் பழிவாங்கினான் என்பதே எனது கருத்து.

இவரது டுவிட்டருக்கு பதில் ஒருவர் தெரிவிக்கையில்,

பாவப்பட்ட தேசத்தை அழிக்கவும் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா கட்டடத்தை அழிக்கவும் இறைவனை அனுப்பியதுதான் சாண்டி என்னும் புனிதப் புயல் என்று கூறியுள்ளார்.

அநீதி, ஊழல், கொடுங்கோண்மை ஆகியவற்றுக்கு பெயர் போன ஐ.நா சபையின் கட்டடத்தை அழிக்க கடவுளிடம் பிரார்த்தனை செய்தோம் எனக் குறிப்பிட்டார். (அ-2)

# போதைப்பொருள் கடத்திய வழக்கில் 103 பேர் கைதாகினர்

கனடாவில் போதைப்பொருளை கடத்திய வழக்கில் 103 பேரை பொலிஸார் கைது செய்தனர். கனடாவில் ஒண்டாரியோ, பிரிட்டிஷ், கொலம்பியா, கியூபெக் மாகாணங்களை சேர்ந்த நபர்களே கைது செய்யப்பட்டனர்.

103 பேர் உட்பட இவர்களை வழிநடத்திய போதைப்பொருள் கும்பலின் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இத்தாலியின் மாபியா கும்பலோடும் அயர்லாந்தின் குற்றவாளிகளோடும் தொடர்பு வைத்திருப்பது தற்போது தெரியவந்துள்ளது. மேலும் இவர்கள் கடந்த 6 மாதத்தில் மட்டும் 50 மில்லியன் டொலரை சம்பாதித்து இருப்பதும் தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல்களிடம் இருந்து 25 மில்லியன் டொலர் மொத்தப் பணமும் 13 வண்டிகளும் கொகைன் உட்பட போதை மருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஐந்து வீடுகளையும் பொலிஸார் கைப்பற்றினர். (அ-2)

# பேருந்து மீது துப்பாக்கிச்சூடு; 18 பேர் உயிரிழந்தனர்

## பாகிஸ்தானில் சம்பவம்

பாகிஸ்தானில் பேருந்து ஒன்றின் மீது நடந்த துப்பாக்கி சூட்டில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குஸ்தார் பகுதியில் பெற்றோல் நிலையம் ஒன்றில் பேருந்து நின்று கொண்டிருந்தது. இப்பேருந்து மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில், துப்பாக்கியுடன் வந்த மனிதன் பேருந்தை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டுள்ளான். அப்போது சில தோட்டாக்கள் அங்கிருந்த பெற்றோல் பீப்பாய்கள் மீது பட்டதால் வெடித்து தீப்பிடித்து எரிந்தன.

இந்த தீ வேகமாக பரவியதால் பேருந்து தீப்பிடித்து எரிந்தது. மேலும் பல கடைகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவித்துள்ளனர். (அ-2)

# மலாலாவின் தந்தைக்கு தூதரகத்தில் வேலை

தலிபான்களுக்கு எதிராக போராடிய சிறுமி மலாலாவின் தந்தைக்கு பிரிட்டனில் உள்ளபாகிஸ்தான் தூதரகத்தில் வேலை வழங்கப்படும் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பெண்கள் கல்விக்காகவும் தலிபான்களுக்கு எதிராகவும் போராடிய சிறுமி மலாலாவை கடந்த மாதம் தலிபான்கள் சுட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவருக்கு பிரிட்டனில் உயர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் மலாலாவின் குடும்பத்தினர் தற்போது பிரிட்டனில் உள்ளனர்.

மலாலாவின் சிகிச்சை முடிய இன்னும் பல மாதங்கள் ஆகும் என்பதால் தந்தை ஜியாவுதீன் பிரிட்டன் அரசிடம் தஞ்சம் கேட்டு விண்ணப்பிக்க உள்ளதாக நியூஸ் டெய்லி செய்தி வெளியிட்டுள்ளது. இது பாகிஸ்தான் அரசை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து பிரிட்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் வேலை அளிப்பதாக ஜியாவுதீனிடம் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் உறுதியளித்ததாகவும் புகலிடம் கேட்டு விண்ணப்பிக்கக் கூடாது என்று மாலிக் கேட்டுக் கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தபால் பொதியில் வெள்ளை நிற பாம்பு

## ஊழியர்கள் தப்பியோட்டம்

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் அருகே உள்ளது சபி நகரம். இங்குள்ள தபால் அலுவலகத்திற்கு வந்த பொதிகளை ஊழியர்கள் தனித்தனியாக பிரித்துக் கொண்டிருந்தனர். அப்போது பொதியில் அனுப்பப்பட்ட மலைப்பாம்பை கண்டு தபால் ஊழியர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர்.

வந்த பொதிகளுக்கு நடுவே வெள்ளை மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்டு ஊழியர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர்.

அதன்பின் வனத்துறையினர் உதவியுடன் குறித்த மலைப்பாம்பு பிடிக்கப்பட்டது. மேலும் மூன்று மலைப்பாம்புகள் பொதியில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.

மலைப்பாம்பை உரிய முறையில் பெறாமல் தபால் பொதியில் அனுப்பி பெற்றுக் கொள்ள முயன்றவரை பொலிஸார் கைது செய்து வழக்குபதிவுசெய்துள்ளனர். வெள்ளை மலைப்பாம்பு விசமற்றது என பின்னர் தான் தெரியவந்தது. (அ-2)




# பிரிட்டனில் வெள்ள அபாயம்; சுற்றுச்சூழல்துறை எச்சரிக்கை

பிரிட்டனில் வெள்ளம் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படியும் சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளது.

பிரிட்டன் கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கோடை காலத்திலும் ஜூலை முதல் ஒக்டோபர் வரையிலான காலத்திலும் மழைப்பொழிவு இருந்ததால் நிலத்தடி நீர் பெருகி விட்டது.


எனவே அடுத்த மழை பெய்வதால் நிலத்தடி நீரின் அளவு அதிகரிக்கும். இதனால் வெள்ளம் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படியும் சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் துறையின் வெள்ள இடர் மேலாண்மை பிரிவின் தலைவரான பால் மஸ்ட்டோ கூறுகையில்,

வெள்ளம் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு நமது நாட்டின் மிக முக்கியமான இயற்கை பேரிடராக இருந்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

இது தவிர கடற்கரை பகுதியில் எதிர்வரும் 12 முதல் 18 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் டிசம்பர் 12 முதல் 18 ஆம் திகதி வரையிலான நாட்களில் அலைகள் உயரமாக எழுவதால் ஊருக்குள் கடல்நீர் புகுந்து விடும் அபாயமும் உண்டு என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இராணுவ பலத்தை அதிகரிக்கும் சீனா



சீனா சமீபகாலமாக தனது இராணுவத்தில் அதி நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி வருகிறது. ஏற்கனவே ஜெ-20 என்ற ரக ஜெட் போர் விமானத்தை ஏராளமாக தயாரித்து சீனா வைத்துள்ளது.

தற்போது ஜெ-31 என்ற புதிய நவீன போர் விமானத்தை தயாரித்து உள்ளது. இதன் வெள்ளோட்டம் வடகிழக்கு பகுதி மாகாணமான லியான்னிங் பகுதியில் நடந்ததாக ஆசிய பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். இதன் மூலம் சீனா இராணுவ பலத்தில் உயரிடத்தை பெற்றிருப்பதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சம்பிக்கவுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் யாழ்.மாவட்டத்தில் மின்சக்தி மற்றும் அதனோடு இணைந்த பல்வேறு சக்திவள பாவனையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் அவற்றை எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மின்சக்தி மற்றும் சக்திவள அமைச்சர் சம்பிக்க ரணவக்க கலந்து கொள்ளவுள்ளார் என பிரதான நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (அ-9)

# மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பினர்

## முல்லை.அரச அதிபர் தகவல்

தொடர்ச்சியான கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பியதுடன் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டலில் அவர்களுக்கு சமைத்த உணவு, கூரை விரிப்பு மற்றும் நில விரிப்புகள் வழங்கப்பட்டதாக தெரிவித்த அவர் சமைத்த உணவு வழங்குதல் நேற்று முன்தினத்துடன் நிறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடும் மழை, காற்று, வெள்ளம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதுடன் 543 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் சிறந்த காலநிலை நிலவியதையடுத்து மேற்படி 543 குடும்பங்களும் மீள தமது சொந்த இடங்களுக்கு அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டனர். தொடர்ந்தும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில தினங்களாக தொடர்ந்த கடும் மழையினால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்களிலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டன. (அ-2)

# ஐ.நாவின் கேள்விகளில் இருந்து தப்பவே காடுகளில் குடியேற்றம்

## அரசை சாடுகிறார் அசாத் சாலி

மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த மக்களை அரசாங்கம் காடுகளில் குடியேற்றியுள்ளதாக முன்னாள் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகிலகால மீளாய்வு அமர்வுகளுக்கு அஞ்சியே அரசாங்கம் இவ்வாறு மக்களை மெனிக்பாம் முகாமிலிருந்து அகற்றிக் கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முற்றுமுழுதாக பூர்த்தியாகியுள்ளன என்பதனை ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு காண்பிக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடாரங்களிலும் பொலித்தீன் கூரைகளிலும் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்ந்து வருவதாகவும் மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் அவசர அவசரமாக மக்களைக் காடுகளில் குடியேற்றியுள்ளதாகவும் இந்தப் பிரதேசங்களில் குடிநீர்,பாடசாலைகள் மலசலகூடங்கள் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் கிடையாது எனவும் அசாத் சாலி தெரிவித்துள்ளார். (அ-2)

# கடலில் தத்தளித்த 43 பேர் கடற்படையினரால் மீட்பு

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 43 பேர் கடந்த முதலாம் திகதி பேருவளை மீன்பிடித்துறைமுகத்திற்கு அருகே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வள்ளத்தின் மூலம் வென்னப்புவ கடற்கரையிலிருந்து அவுஸ்திரேலியா செல்வதற்கு இவர்கள் கடந்த 21 ஆம் திகதி புறப்பட்டுள்ளனர்.

கடும்மழை, காற்று காரணமாக குறிப்பிட்ட பயணத்தை தொடர முடியாது வள்ளத்தை செலுத்திய நபர் தம்மை பேருவளை மீன்பிடித்துறைமுகத்திற்கு அழைத்து வந்ததாக கைது செய்யப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். 5, 4 வயதுடைய இரு சிறுவர்கள், 8 பெண்களும் இக் குழுவில் அடங்குகின்றனர்.

இவர்கள் பயணம் செய்த வள்ளத்தையும் கடற்படையினர் கைப்பற்றி பேருவளை பொலிஸாரிடம் பின்னர் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைக்காக பேருவளை பொலிஸார் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

படகில் பயணித்த மேலும் 7 பேர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்கள் குறித்து தகவல் திரட்டப்பட்டு வருவதாகவும் குற்றத்தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டனர். (அ-2)

# முன்னாள் போராளிகளுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது குறித்து மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் சில போராளிகளை வேலைவாய்ப்பு நிமித்தம் நாடுகளுக்கு அனுப்ப முடியும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் போது பொலிஸ் சான்று கோரப்படுவது வழக்கம். எனவே, புனர்வாழ்வு பெற்றுள்ள புலி உறுப்பினர்கள் பொலிஸ் சான்று பெறும் போது அதில் முன்னாள் புலி உறுப்பினர்கள் என்று குறிப்பிடப்படும் போது அந்த நபர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிராகரிக்கப்படும்.

எனவேதான் அவர்களுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுப்பதற்கான விசேட ஏற்பாடுகளை செய்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் இனி புதிய தோற்றத்தில்-அமுனுகம

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை புதிய தோற்றத்தில் செயற்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதென பிரதிநிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

திட்டங்கள் எதுவுமின்றி பல இடங்களில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்குப் பதிலாக மத்திய நிலையப்பகுதிகளில் புதிய முறையில் தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கென தெரிவு செய்யப்பட்ட இடத்தை அபிவிருத்தி வலயமாக அறிவிக்கவுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் கூறினார்.

சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர், மின்வசதி வழங்குவதில்பிரச்சினைஏற்பட்டுள்ளதாகவும்அவற்றை தவிர்க்கும் வகையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் எனவும் பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். (அ-2)

දිසා අධිකරණය, පේදුරුතුඩුව
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை
**DISTRICT COURT, POINT PEDRO**

## அறிவித்தல்
## மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

முகுந்தன் பெண் கீதபானு,
(மறுநாமம் தங்கவேல் மகள் கீதபானு)
ஆழ்வார் ஒழுங்கை, ஓடக்கரை,
பருத்தித்துறை
-வழக்காளி-

வழ.இல:880/12
தன்மை: மணநீக்கம்

எதிர்
இராஜதுரை முகுந்தன்,
84, தம்பசிட்டி றோட்,
பருத்தித்துறை
-எதிராளி-

மேற்குறித்த எதிராளியாகிய உமக்கு மேலே பெயர் குறித்துள்ள வழக்காளி சார்பாக சட்டத்தரணி திரு.சபா ரவீந்திரன் அவர்களால் மணநீக்கம் கோரி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் 06.12.2012 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் 06.12.2012 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் அல்லது அதற்கு முன்பாக இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதுடன் குறித்த திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் நீவீர் ஆட்சேபனை சமர்ப்பிக்கத் தவறின் இவ் வழக்கானது மறுகட்சிக்காரர் இன்றி ஒருமுகமாக விளங்கி தீர்ப்பளிக்கப்படும் என்றும் உமக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகின்றது. அத்துடன் பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீவீர் இந்நீதிமன்றத்தில் தோன்றாவிடின் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிப்பதற்கான முகவரியை கூறும் விபரக் குறிப்பொன்றை இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

(சி/1431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயசு



ரேணிகுண்டா படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர் மற்றும் கதாநாயகன் ஆகியோர் மீண்டும் இணையும் படம்தான் 18 வயசு. நல்ல வெற்றிக் கூட்டணி. நல்ல எதிர்பார்ப்பு.

, பெற்றோர் செய்யும் தவறுகளால் மனநோயாளியாக உருவாகுகிறான் ஒருவன். அவனுக்கும் காதல் பிறக்கிறது. நோயும் காதலும் கலக்கும் போது என்ன நடக்கிறது என்பதே கதை. பல தடவை தமிழ்ச்சினிமாவில் வந்து விட்டகதை. திரைக்கதையை வித்தியாசமாகக் கொடுக்கிறோம் என்ற பேரில் கதாநாயகனுக்கு வரும் மன நோயை மட்டும் இதுவரை தமிழ்சினிமாவில் காண்பிக்காத நோயாகக் காண்பித்திருக்கிறார்கள். இவ்வளவுதான் பட்ஜெட். இவர் தான் ஹீரோ. தமிழ் சினிமாவில் உனக்கு வாழ்க்கை கொடுத்த எனக் குச் சம்பளமே இல்லாம ஒரு படம் இயக் கிக்கொடு என்று தயாரிப்பாளர் கட்டளை போட்ட பின் இயக்குநர் பன்னீர்ச்செல்வம் உருவாக்கிய கதை எனத் தோன்றுகிறது.

முதல்படமான ரேணிகுண்டாவிலேயே எக்கச்சக்க ஸ்கோர் செய்த ஹீரோ ஜானி இதிலும் நடிப்பிலும் துடிப்பிலும் வெளுத்து வாங்கி இருக்கிறார். சக மன நிலை பாதிப்பாளர் சத்யேந்ராவுடன் சேர்ந்துகொண்டு நாயகியைக் கடத்துவதும் கடத்துவதற்கு முன் காதலிப்பதுமாக பட்டையைக் கிளப்பி இருக்கிறார் பலே பலே. தயாரிப்பாளரின் மகன் என்பதும் இன்னும் எத்தனை காலம் தான் ஜானிக்கு கைகொடுக்குமோ தெரியாது. சீக்கிரம் நடிக்க ஆரம்பிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். இவரைப்பற்றி வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை. கொஞ்சம் எனர்ஜி குறைவான மாதிரி இருந்தாலும் கதாநாயகி காயத்திரி தேறிவிடுகிறார். அம்மா கதாபாத் திரத்தில் தோன்றும் யுவராணி பழக்க ப்பட்ட பாத்திரம் என்பதால் ரொம்ப மெனக்கெடாமல் நடித்துவிட்டுச் செல்கிறார். ரோகினியும் அனுபவ சாலி என் பதால் அவரும் தனது கதா பாத்திரத்தை நிறையவே செய் கிறார்.



இசை தினேஷ் சார்லஸ் பேஸ்கோ... என்ன சொல்வ தென்றே தெரி யவில் லை. நாம் ஏதாவது சொல்லப் போக கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்றால் என்ன செய் வது? அதனால் படம் பார் த்தா ல் நீங் கள் எங் க ளுக்கு சொல்லுங்கள் எப்படி என்று. ஒளிப்பதிவு ஏழைக்கு ஏற்ற ஒண்ணு.

திரை விமர்சம்

இயக்கம்??? இதில் இருக்கா என்றுதெரியவில்லை. எந்தப் படத்தில் உண்மையான இயக்குநர் பன்னீர்ச் செல்வம் தெரிகிறார்?? ரேணிகுண்டாவிலா? 18 வயசிலா? அடுத்தபடம் வந்தாத் தான் தெரியும். 18 வயசு- இது ஒரு மறக்கவேண்டிய தப்பு

# காதலியை கரம் பிடிக்கிறார் தில்லுமுல்லு நாயகன் சிவா



கொலிவுட்டில் சென்னை -28 படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமாகி தமிழ்படம் மூலம் கதாநாயகனாக மாறியவர் சிவா. இவர் சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்ற கலகலப்பு படத்தில் இரண்டு கதாநாயகர்களில் ஒருவராக நடித்திருந்தார்.

இவருக்கும் பட்மின்டன் வீராங்கனை பிரியா என்பவருக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் கடந்த 5 வருடங்களாக காதலித்து வந்தார்கள்.

அதைத்தொடர்ந்து இரண்டு பேரும் திருமணம் செய்து கொள்ளமுடிவுசெய்து இருக்கிறார்கள்.

அதன்படி சிவா-ப்ரியா திருமணம் வருகிற 15ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது. மணமகள் ப்ரியா சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். சிவா தற்போது தில்லுமுல்லு என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இது பல வருடங்களுக்கு முன்பு ரஜனிகாந்த் நடித்து வெளிவந்த படம். அந்தப் படத்தை அதே பெயரில் மீண்டும் தயாரிக்கிறார்கள். ரஜனிகாந்த் நடித்த வேடத்தில் சிவா நடிக்கிறார். பழைய தில்லுமுல்லு படத்தில் நடித்தபோதுதான் ரஜனிகாந்த்- லதா காதல் திருமணம் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரசிகர்களின் எதிர்பார்ப்பை அதிகரிக்கும் துப்பாக்கி

தீபாவளிக்கு வெளியாகும் விஜய்யின் துப்பாக்கி படம் பற்றி நாளுக்கு நாள் புது தகவல்கள் உலா வருகின்றன. விஜய் -முருகதாஸ் - தாணு போன்ற பிரபலங்கள் இணைந்திருப்பதால் படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இதுவரை இப்படி ஒரு படத்தில் நான் நடித்ததே இல்லை என படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் விஜய் கூறியிருப்பது எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது. மேலும் இயக்குநர் முருகதாசும் படத்தின் வெற்றியை பெரிதும் எதிர்பார்த்து காத்திருக்கிறார். இதற்கு காரணம் துப்பாக்கி படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தால் ஹிந்தியில் ரீமேக் செய்ய முடிவு செய்துள்ளாராம் முருகதாஸ். இப்படத்தில் பிரபல மலையாள நடிகர் பிரசாந்த் நாயர் முக்கிய வேடத்தில் நடத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கமலுடன் நயனின் 10 நிமிடங்கள்...



ஏ. ஆர். முருகதாஸ் தயாரிக்கும் அடுத்த திரைப்படத்தின் பூஜைக்கு வந்த கமல் ஹாசனுடன் தனியா 10 நிமிடம் பேசியுள்ளார் நடிகை நயன்தாரா. கமல்ஹாசனின் அடுத்த திரைப் படத்தில் நடி க்க அப்போது அ வர் வாய்ப்பு கேட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

விஜய்யின் துப்பாக்கியை முடித்து விட்ட ஏ. ஆர். முருகதாஸ் அடுத்த ஒரு திரைப்படம் தயாரிக்கப் போகிறார். அத்திரைப் படத்தின் பெயர் ராஜாராணி. இந்தத் திரைப்படத்தை அட்லி இயக்குகிறார். இதில் ஆர்யா- ஜெய் இணை ந்து நடிக்கிறார்கள். நாயகியாக நயன்தாரா நடிக்கவுள்ளார். இப்படித்தின் பூஜை கமல்ஹாசனின் வீட்டில் நடைபெற்றது. அப்போது பூஜை முடிந்த பின்னர் கமல்ஹாசனுடன் பேச விரும்புவதாக நயன்தாரா கூறவே, கமல்ஹாசனும் தனியா அழைத்துச் சென்று 10 நிமிடம் பேசியுள்ளார்.

அப்போது கமல்ஹாசனுடன் அடுத்த திரைப் படத்தில் நடிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதற்கு கமல் என்ன பதில் சொன்னார் என்பது தெரியவில்லை. இருப்பினும் கமல்ஹாசனின் அடுத்த தமிழ்ப் படத்தில் நயன்தாராவுக்கு சின்னதாகவோ அல்லது பெரியதாகவோ ஒரு வாய்ப்பு நிச்சயம் உண்டு என்று அடித்துக் கூறுகிறார்கள் பூஜைக்கு வந்தவர்கள்.

# அமலா-ரிஸ்ஸா மோதல்

தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று திரையுலகிலும் கைவசம் நிறைய திரைப்பட வாய்ப்புக்களைப் பெற்று கடுமையான வேலைப்பளுவுடன் காணப்படுகிறார் அமலாபால்.

இதேவேளை மயக்கம் என்ன, ஒஸ்தி நாயகி ரிஸ்ஸா கங்கோப்பாத்யாயாவும் தமிழ், தெலுங்குத் திரையுலகில் மிகப்பெரிய பட்ஜெட் திரைப்படங்களுக்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் மேற்படி இரு நாயகிகளுக்கும் இடையில்





திரையுலகில் மோதல் ஏற்பட்டுள்ளது. தெலுங்கில் போக்கிரி திரைப்படத்தை இயக்கிய பூரி ஜெகநாத்தின் இயக்கத்தில் புதிய திரைப்படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார் அமலாபால். இதில் இவருக்கு பிரதான கதாபாத்திரமாம். இதே வேளை நடிகை ரிஸ்ஸாவையும் இத்திரைப்படத்தின் மற்றொரு கதாநாயகியாக தெரிவு செய்துள்ளாராம் இயக்குநர். இந்நிலையில் இத் திரைப்படத்தின் நடிப்பில் யார் அசத்தப் போவது என்ற மோதலில் அமலாவும் ரிஸ்ஸாவும் களமிறங்கியுள்ளார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.கமல் , தெல்லிப்பழை

வியாசரே!

அடிச்சா நெத்தியடி என்கி றார்களே. அப்படி என்றால் என்ன?

***இது பிறக்ரிக்கல் மூலம் விளக்க வேண்டிய பாடம். ஆகையால் நாம் நேரில் சந்திக்கவேண்டும்.***

---

சு.கபில், இருபாலை

Dear Vija Sir!

பழைய பகையை வைத்துப் பழிவாங்கும் எண்ணத்தோடு அன்பு மொழி கூறுபவர்கள் பற்றி உமது கருத்து?

**முக நக நட்பது நட்பன்று வள்ளுவன் தெளிவாகச் சொல் லியிருக்கிறானே!**

---

சதீஸ், கந்தர்மடம்

வியாசரே!

நட்பைக் காதலாக்கிப் பார்ப்பவர்கள் பற்றி...?

**பின்னர் கசிந்து கண்ணீர் மல்குவார்கள்.**

---

திஸ்மி , அரியாலை

வியாசரே!

ஒரு கணவன் தன் மனைவியிடம் எதை எதிர்பார்க்கிறான்.

**நாலு பேருக்கு முன்னால் நாகரிகமாக நடப்பதை.**

---

எம்.மைதிலி, அரியாலை

Hello வியாசர்!

எனக்கு நித்திரை வருவதில்லை. என்ன செய்வது?

## மழைகாலத்தில் மாணவர்கள் வீதியில் செல்லப் பயப்படுகிறார் கள். என்ன காரணம்?


**உமது வயதை அறிய விரும்புகிறேன்... மருந்து தர**

---

ஆர். ஆரணி, கொக்குவில்

Dear வியா!

சிக்கனம் எப்போது வரும்



**கடன்காரன் வீட்டுக்கதவைத் தட்டும்போது.**

---

ஆர். விஜி, யாழ்ப்பாணம்.

வியா சார்!

ஒருவன் தனது திறமையால் முன்னேற முயல்கையில் பலர் தடையாக நிற்கிறார்களே. இவர்களை என்ன செய்யலாம்?

**பலரின் தடையையும் தாண்டுவது தான் முன்னேற்றம்**

---

ஆர். விஜியலட்சுமி, தாவடி

வியா!

வாலிபர்கள் மோட்டார் சைக்கிளின் ஆக்ஸிலேட்டரை முறுக்கோ முறுக்கென்று முறுக்கித் திரிகிறார்களே இதைத்தடுக்க ஒரு வழி கூறுங்களேன்?

**கட்டுங்கடங்காக் காளைகளுக்கு குறி சுடவேண்டும்.**

---

க. பிரியா, யாழ்ப்பாணம்.

வியாசரே!

பத்திரிகைகளில் எம்மால் எழுப்பப்படும் கவிதைகளுக்குக் குற்றம் கூறும் பழைமைவாதிகளைப் பற்றி யாது கூறுகிறீர்?

***பழையன கழிந்து விட்டது. அது அவர்களுக்குத் தெரியாது போலும்.***




---

தர்மிலா, நெல்லியடி

வியா!

அரசியல்வாதிகள் ஆன்மீக உண்மைகளை அறிந்து விட்டு அரசியலுக்கு வந்தால் எப்படி இருக்கும்?

**பாராளுமன்றம் கோவிலாகிவிடும். நாடு புனிதமாகிவிடும்.**

---

த.அனோஜா , கோண்டாவில்

வியா சேர்!

மழைகாலத்தில் மாணவர்கள் வீதியில் செல்லப் பயப்படுகிறார்கள். என்ன காரணம்?

***வீதிக்கிடங்கில் ஏறிவிழும் வாகனங்கள் சேற்றை வாரி அடித்தால் எப்படி எம் செல்வங்கள் வீதிக்கு வரத்துணிவர்.***

---

ஆர். றஜிதா, நெல்லியடி

வியாசரே!

தமிழனின் பண்பாடு என்ன?

***கூட இருந்து குழி பறிப்பது.***


---

ச.அனோஜன், சுண்டுக்குளி

வியாசர் அவர்களே!

ஏழையின் வாழ்க்கையா பணக்காரனின் வாழ்க்கையா கவலையற்றது?

***ஏழை கஞ்சிக்கு உப்பில்லை என்கிறான்... பணக்காரனோ பாலுக்குச் சர்க்கரை இல்லை என்கிறான்.***



**உமது கேள்வியின் படி கோழி தான் முதலில் .....**

---

ஆர்.டிலக்ஸி, தாவடி

அன்பின் வியா!

கவிதை எழுத ஒரு மூட் தேவை. அதுபோல வாசகர் கேள்விக்கு பதில் எழுதவும் ஒரு மூட் தேவையா?

**மூட் தேவையில்லை. ஆனால் நேரம் தேவை.**

## அரசியல்வாதிகள் ஆன் மீக உண்மைகளை அறிந்து விட்டு அரசியலுக்கு வந்தால் எப்படி இருக்கும்?

சு. மயூரன், அரியாலை

அன்பின் வியா!

கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா (தெளிவான விளக்கம் வேண்டும்)

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்,**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை மறுதினம் நடக்க இருக்கும் நிலையில் தேர்தலில் உச்சக்கட்ட பிரசாரம் என்றெல்லாம் ஊடகங்கள் சொல்லி வருகின்றன.

ஆனால், உண்மையில் அமெரிக்கா போன்ற ஒரு தொழில் வளமான முன்னேறிய நாட்டில் இந்த தேர்தல் என்ற ஜனநாயக நடைமுறை இந்தியா அல்லது இலங்கை போன்ற பின் காலனிய ஜனநாயக சமூகங்களைப் போலல்லாமல் சற்று வித்தியாசமாகவே நடக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பலரும் நினைப்பதைப் போல நேரடியான வாக்களிப்பு மட்டும் அல்ல. போட்டியிடும் வேட்பாளர் நாட்டின் ஒட்டுமொத்த பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளை பெற்றால் மட்டும் போதாது. அவர் மாநிலங்களில் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு செய்வோர் அவையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதன் வாக்காளர் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

உதாரணமாக மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள்



உண்டு. அதேபோல மிகச் சிறிய மாநிலமான ஜயோவா மாநிலத்துக்கு 6 உறுப்பினர்கள். மொத்தம் இந்த தேர்வு செய்வோர் அவையில் 538 உறுப்பினர்கள் இருப்பதால் அதிபர் தேர்தலில் வெல்ல வேண்டுமென்றால் இந்த அவையில் 270 வாக்குகளை பெற வேண்டும்.

நாட்டில் பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அதேசமயத்தில் சில மாநிலங்களில் தோற்றதன் மூலம் இந்த தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் தேவைப்படும் 270 வாக்குகளைப் பெற முடியாமல் போனால் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷிக்கு எதிராக போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் இதுபோலத்தான் தேசிய அளவில் மக்கள் நேரடியாகப் அளித்த வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாலும் மாநிலத் தேர்வு செய்வோர் அவை வாக்குகளைப் பெறும் போட்டியில் புளோரிடா மாநிலத்தை சர்ச்சைக்குரிய விதத்தில் புஷ்ஷிடம் இழந்ததன் மூலம் ஜனாதிபதிபதி தேர்தலில் தோற்றார் என்பது சமீபத்திய வரலாறு.

இன்னொரு விடயம். இது நாட்டின் ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தல் என்றாலும் தேர்தலை நடத்தும் பொறுப்பு மாநிலங்களிடமே இருக்கின்றது.

எனவே, தேர்தலில் தங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கும் மாநிலங்களில் பொதுவாக இரு பிரதான கட்சிகளும் குறி வைப்பதில்லை. உதாரணமாக ஜனநாயகக் கட்சியின் கோட்டைகள் என்று வரலாற்று ரீதியாகவே கருதப்படும் கலிபோர்னியா, நியூயோர்க் போன்ற மாநிலங்களிலோ அல்லது குடியரசுக் கட்சி பலமாக இருக்கும் டெக்சாஸ் போன்ற மாநிலங்களிலோ இரு கட்சிகளின் பிரசாரங்களைப் பெரிதும் காண முடியாது.

ஸ்விங் ஸ்டேடஸ் அதாவது வாக்காளர்கள் வரலாற்று ரீதியாக மாறி மாறி வாக்களித்து வரும் சுமார் 11 மாநிலங்கள் இந்தப் பட்டியலில் இருக்கின்றன. ஒஹையோ, புளோரிடா, கொலராடோ விஸ்கான் சின், மிச்சிகன் போன்ற இந்த மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் சுமார் 96 தெரிவு செய்வோர் அவைக்கான உறுப்பினர்களைப் பெறத்தான் கடுமையாக இரு வேட்பாளர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

இந்த மாநிலங்களில்* நேரடிப் பிரசாரத்தைத் தவிர தொலைக்காட்சி மூலம் கட்சிகளே நேரடியாகச் செய்யும் விளம்பரங்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆதரவு குழுக்கள் எல்லாம் சேர்ந்து தொலைக்காட்சி சனல்களில் கடும் பிரசாரத்தை செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறன் விருத்தியை சர்வதேச மட்டத்தில் அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

திறன் அபிவிருத்தியில் இலங்கையை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது. இதன் ஒரு அங்கமாகவே இலங்கை திறன் உங்கள் எதிர்காலத்தைத் தொடுங்கள் என்ற திறன்கள் மற்றும் புத்தாக்கப் போட்டி மற்றும் கண்காட்சியொன்று நடத்தப்படவிருப்பதாக இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இலங்கை இளைஞர்களின் திறன்களை மதிப்பீடு செய்வதுடன் திறமையான கைவினைஞர்களின் ஆற்றல்களை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்தும் முகமாக உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் இக்கண்காட்சியும் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 6, 7, 8, ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கண்காட்சியும் போட்டியும் நடைபெறவிருப்பதாக அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், இலங்கை திறன் அபிவிருத்தியில் இன்னமும் முன்னேற வேண்டியுள்ளது. இலங்கையிலிருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்கின்றனர். எனினும் இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு தொழில் திறன் இல்லை. இவர்களின் தொழில் திறன்களை அதிகரிப்பதன் ஊடாக அவர்களின் வருமானத்தையும் அதிகரிக்க முடியும்.

தொழில் திறன் மிக்கவர்களுக்கு தொழில் சந்தையில் பாரிய கேள்வியும் உள்ளது. இதற்கு ஏற்றவகையில், இளைஞர், யுவதிகளின் தொழில்திறன்களை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்த நோக்கத்திலேயே பிராந்திய ரீதியில் தொழில்திறன் குறித்த போட்டிகள் நடத்தப்பட்டு திறமையாகச் செயற்பட்டவர்கள் தேசிய ரீதியிலான போட்டியில் பங்கு பற்றியுள்ளனர். மேசன், மர வேலை, கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொழில் திறன் போட்டிகள் நடத்தப்பட்டன.

அத்துடன் நவீன உற்பத்திக் கண்டுபிடிப்புக்களுக்கான போட்டிகளும் நடத்தப்பட்டன. மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பண்டராநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் 65 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. தொழில்திறன் போட்டியில் வெற்றியீட்டும் முதலாவது வெற்றியாளருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது வெற்றியாளருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மூன்றாவது வெற்றியாளருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

புத்தாக்கங்களுக்கும் இவ்வாறு வழங்கப்படவுள்ளது. வெற்றியீட்டியவர்களுக்காக 11.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி மற்றும் போட்டியின் மூலம் இலங்கையிலுள்ளவர்களின் தொழில் திறனை மேலும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கோம்பாவில் மக்களுக்கு காணி உறுதிகள்

(மல்லாவி)

காணி அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய மாகாண காணி அபிவிருத்தி அமைச்சினால் முல்லை. மாவட்டத்திலுள்ள கோம்பாவில் கிராமத்தில் வசிக்கும் 175 காணியற்ற குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளதாக முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வு நேற்றுக்காலை கோம்பாவில் கிராமத்தில் அரச அதிபர் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாண காணி அபிவிருத்தி அமைச்சின் ஆணையாளர் காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கினார்.

இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமசேவையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-15)

# கனடாவில் தமிழ் சிறுமியை காணவில்லை-பொலிஸார்

கனடா-ஸ்காபரோ நகரில் நீல்சன் வீதி மற்றும் எஸ்மர் வீதி சந்திப்புக்கருகில் வசிக்கும் 16 வயதுடைய ஒரு தமிழ் மாணவியைக் காணவில்லையென றொறன்ரோ பொலிஸ் அறிவித்துள்ளது. அவரைக் கண்டுபிடிக்க உதவி கோரியுள்ளது.

மண்ணிறக் கண்களும் கறுப்பு நிற அடர்த்தியான தலைமுடியுடைய இந்த மாணவியின் பாதுகாப்புத் தொடர்பாக தாங்கள் கரிசனை கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இவரைப்பற்றி தகவல் தெரிந்தோர் 416 222 8477 என்ற தொலைபேசி இலக்கத்திலோ அல்லது www.222tips.com இணையத்தளத்திலோ தகவல்களைத் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (அ-2)

ஓராண்டு நினைவலை

அமரர் கந்தையா இராசையா

(K.R.S ஸ்தாபகர்)

தோற்றம் 28.11.1924

மறைவு 16.11.2011



திதி : ஐப்பசி அமரபக்க சஷ்டி

நம் இரு விழிகளாய் ஒரு மனதோடு
நல் வழி காட்டிய ..
நம் இரு தெய்வங்கள். அம்மா ஐய்யா!

நவ மணியாய் ...
நம் அனைவரையும் ஈன்று
நல் மக்களாய் இப்புவியில் - நம்மை
நல்லபடி வாழ வைக்க இறைபக்தியில் திழைத்து...
நன்மையை விதைத்து இறைபதம் எய்தியிருக்கின்றார்கள்.

அன்று ஒரு புரட்டாதி திங்களில்
எங்கள் வீட்டு முழு நிலவை இழந்தோம்.
இன்று ஒரு ஐப்பசித் திங்களில்
எங்கள் சூரியனையே இழந்தோம்!

புன்னகைத் தோட்டமாய்
பூத்துக்குலுங்கிய் – எங்கள்
வீட்டு முற்றம்!
வெறித்துப் போய் கிடக்குதய்யா!
ஆண்டு ஒன்று நீ பிரிந்து
ஆறாத காயம் எம் ஆழ் மனதில்.
மீண்டு வர மாட்டாயோ

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல பரராஜசேகரனை வேண்டி நிற்கும்

அன்பு பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்! சி - 1431

# சட்டவிரோத ஆயுதங்கள் குறித்து தகவல் சேகரிப்பு

## காத்தான்குடியில் சுவரொட்டி

(காத்தான்குடி)

சட்டவிரோத ஆயுதங்கள் தொடர்பாக தகவல்களை வழங்குமாறு கோரி காத்தான்குடி பிரதான வீதியில் பேருந்து நிலைய சதுக்கம் உட்பட பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் ஆயுதங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிட்டு இவ்வாறான சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கான தண்டனைகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவ்வாயுதங்களை வைத்திருப்பவர்கள் தொடர்பான விபரங்களை தருபவர்களுக்கான பணப்பரிசுத் தொகை விபரம் என்பன காணப்படுகின்றன.

இச்சுவரொட்டியில் குறிக்கப்பட்டுள்ள வாசகங்களுக்கு அதில் எந்தவொரு அமைப்பும் அதிகார பூர்வமான உரிமையினைக் கோரவில்லையெனத் தெரியவருகின்றது. (அ-2)

இருபத்தைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 . 11 . 1937

ஆண்டவன் அடியில் 04 . 11 . 1987



அமரர் முத்துத்தம்பி- பரமலிங்கம்

ஆண்டு இருபத்தி ஐந்து ஆனாலும் அகலாது. உம் நினைவு
காலம் ஓடிப் போனாலும் அகலாது உமது அன்பு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்து பறந்ததுவோ
உங்கள் சிரித்த முகம் எம்மனதில் நிலையாய் தெரிகிறது.
பிறப்புண்டேல் இறப்பு நியதி இருப்பினும்
ஏற்க மறுக்கிறது எம்மனம்.
உங்களை காணத் துடிக்கிறது நிதம்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தானே ஆட்சி செலுத்தாதவர்களை மற்றவர்கள் ஆட்சி செய்வார்கள்.

-இக்பால்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரசியலில் இதெல்லாம் சகஜம் அப்பா!

பிரச்சினையை உருவாக்குதல், திசைதிருப்புதல் என இரு விடயங்கள் உண்டு. இதில் பிரச்சினையை உருவாக்குதல் என்பது மிகவும் கடினமான காரியம். இதற்காக பல்வேறு காரண காரியத் தொடர்புகளை முன்வைக்க வேண்டியிருக்கும்.

பிரச்சினை உருவாக்கத்திற்காக முன்வைக்கப்படும் காரணங்களை மக்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகம் ஏற்றுக்கொள்ளாதவரை முன்வைக்கப்பட்டப் பிரச்சினை முன்வைத்தவருக்குப் பிரச்சினையை ஏற்படுத்திவிடும்.

இதற்கு எங்கள் நாட்டு அரசியலில் பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். பிரச்சினையை உருவாக்கும் வகையில் விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பில் கருணா அம்மான் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள், மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக, கருணாவின் அரசியல் என்பது சிங்கள அரசியலுடன் இணைந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர், தான் இணைந்திருந்த அமைப்பிற்கு வஞ்சம் தீர்ப்பதற்காக, எதிரியுடன் இணைவது என்பது இருக்கும் வரை வாழ்வதற்கானதே அன்றி அது எவ்வகையிலும் சாதனை படைப்பதற்கானதல்ல.

இது பிரச்சினை உருவாக்கம் பற்றிய எடுத்துக் காட்டு.

மாறாக பிரச்சினையை திசைதிருப்புதல் என்பதை நோக்கினால், போருக்குப் பின்பாக இலங்கை அரசு எடுக்கின்ற அத்தனை நடைவடிக்கையும் பிரச்சினையை திசைதிருப்புவதற்கானவை என்பதை உணர முடியும்.

பாஸ் நடைமுறை, காணிப்பதிவு, நில ஆக்கிரமிப்பு, தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலை நிறுவுதல், கிறிஸ் பூதம் போன்ற அனைத்தும் இதற்குள் அடக்கம்.


மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, தமிழ் கைதிகளின் விவகாரம், காணாமல் போனவர்களின் நிலைவரம் போன்ற விடயங்கள் பேசுபடு பொருளாக இருக்கும் போது அதன் தாக்கத்தை குறைப்பதற்காக காணிப்பதிவு, புத்தர் சிலை விவகாரம் போன்ற விடயங்களை முதன்மைப் படுத்தி பிரச்சினையை திசைதிருப்பும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டது.

அதன் அடுத்த கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச்சட்டமூலத்தை நீக்குதல் என்ற விடயத்தை அரசு கையில் தூக்கிக் காட்டுகிறது. இதனைச் செய்வதன் மூலம் பதின் மூன்று பிளஸ் என்று கூறியவர்களும் பதின்மூன்றில் எதுவும் இல்லை என்றவர்களும் ஐயா! பதின்மூன்றாவதை யாவது அமுல்படுத்துங்கள் என்று கேட்பர்.

இவ்வாறானதோர் கேள்வி எழும்போது வடக்குக் கிழக்கு இணைவு என்ற விடயம் அறுக்கப்படும்.

இதுதான் பிரச்சினையை திசைதிருப்பும் இராசதந்திரம். நடிகர் கவுண்டமணியின் மொழி நடையில் கூறுவதாயின், அரசியலில் இதெல்லாம் சகஜம் அப்பா! அவ்வளவுதான்.

# சைவபரிபாலன சபைத் தலைவரின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்



## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்

தலைவர், இந்து சமயப் பேரவை அமரர் த. சண்முகலிங்கம் அவர்கள் நாவலர் வழி நின்று சமயத்தொண்டு செய்த பெரியார் ஆவார். நல்லைநகர் நாவலர் தோன்றிலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே என்று நாவலர் பெருமானின் மறைவை யொட்டித் தமிழறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பாடினார். ஒரு நிறுவனமாக, இயக்கவாதியாகச் செயற்பட்ட நாவலர்பெருமானின் மறைவு சைவ உலகில் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

நாவலர் வழிநின்று சைவமும் தமிழும் காக்க நாவலர் உருவாக்கிய சான்றோர் பரம்பரை ஆடாது அசையாது தம்பணியில் முனைப்புடன் செயற்பட்டாலுங் கூட நாவலர்பணியை ஒரு நிறுவனம் ஒன்றின் மூலம்தான் செயற்படுத்தலாம், முன்னெடுக்கலாம் என்ற நம்மவரின் அவாவின் விளைவாகத் தோன்றியதுதான் சைவபரிபாலன சபையாகும்.

சமயத்தையும் தமிழையும் நமது பாரம்பரியத்தையும் காக்க முனைப்புடன் செயற்பட்ட இச்சபை நமது சமூகத்தின் பெருமைகுரியவர்களால் வழிநடத்தப்பட்டது.

இவர்கள் வழிநின்று இச்சபையின் தலைவராகச் சமயத்தொண்டு செய்த பெரியார்தான் அமரர் சண்முகலிங்கம் ஆவார்.சைவவாழ்வு வாழ்ந்து, சிவ நெறிச் செல்வராக, நிறைகுடமாகச் சைவப் பணிசெய்த இப்பெரியார் நல்லவர், நாணயமானவர், நாவலர் பணிகளை இதயசுத்தியுடன் செயற்படுத் தும் தகை மையாளர் எனப் பலவாறு போற் றப்பட்டார்.

நாவலர் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்ததுதான் சிதம்பரத்தில் அவர் ஆற்றிய நற்பணிகள் பலவாகும். இப்பணிகள் பல செம்மையாக முன்னெடுத்துச் செல்லப்படாத நிலையில் நாவலர் மறைவுக்குப் பின்னர் அவற்றிற் கவனஞ்செலுத்தி யாழ்ப்பாணத்தாரின் முத்திரையை அங்கு பதித்த பெரியாரே இவரென்றால் புனைந்துரையன்று.


சைவசித்தாந்தத்தில் இவருக்குரிய அறிவு இத்துறைசார்ந்த தமிழக அறிஞர்களோடும் ஆதீனங்களோடும் இவருக்கு நல்ல தொடர்பை ஏற்படுத்த அதனைத் தமது உயர்ச்சிக்கே பயன்படுத்தாது ஈழத்துச் சைவர்களின் மேன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்த இவர் தவறவில்லை.

நாவலர் விட்டுச்சென்ற தருமங்களை ஒழுங்குபடுத்திச் சீர்செய்து பலனுள்ளதாக இவற்றை ஆக்கியவரும் இவரே தான். நாவலர் மீது இவருக்கிருந்த பக்திக்கு எல்லையே இல்லை. இவரின் இப்பக்தியை கூடத்துப்பட்ட நாவலர் நிலை மறுபடியும் நாவலருக்கென அமைக்கப்பட்ட மணிமண்டபத்தை அடைந்தபோது இவருக்கிரு ந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்பதை நாம் கண்ணாரக் கண்டு கொண்டோம்.

இவரது முயற்சியால் சைவபரிபாலன சபை, சைவமகாநாடுகள் பலவற்றை நடத்தியுள்ளது. இறுதியாக நடைபெற்ற மகாநாட்டிலும் இவரது பணி போற்றத் தக்கவாறு அமைந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வேண்டிய நேரத்தில் சலிக்காது உதவிக்கரம் நீட்டியவர் என்பதைப் பழைய தமிழரசுக் கட்சிக்காரர்கள் நன்கறிவர். இத்தகைய பெருமகனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. அத்துடன் இவரது மறைவால் துயருறும் இவரது துணைவியார், பிள்ளைகள் ஆகியோருக்கும் எமது அனுதாபத்தையும் இலங் கைத் தமிழரசுக்கட்சியின் அனுதாபத் தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தெய்வமிதுதானே



இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனா யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல விளங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே

# அயலானை இனம் காண்போம்; அன்புச் செயல்கள் ஆற்றுவோம்

அறிவை வளர்க்கும் கேள்வி பதில் பரிமாற்றத்தை விட, நீயா, நானா, யார் பெரியவன் என்ற பரிதாபமான பெருமை நம்மிடையே தலைதூக்குகின்றமையை நாம் பல தடவைகள் உணர்ந்திருக்கிறோம்.

இயேசுவுக்கும் இதுபோன்ற ஒரு சூழல் உருவாகியிருப்பதை இன்றைய நற்செய்தியில் பார்க்கிறோம். இயேசுவிடம் தவறான, குதர்க்கமான எண்ணங்களுடன் மறைநூல் அறிஞருள் ஒருவரிடமிருந்து கேள்வி கேட்கப்பட்டாலும் அந்தக்கேள்வி மிக அழகான,

## பரமபிதா காட்டிய பாதை


ஆழமான ஒரு கேள்வி என்பதை இயேசு உணர்ந்து அதற்கு என்ன அருமையான ஒரு பதில் சொல்கிறார். இயேசு தந்த பதில் காலத்தால் அழியாத ஒரு பதிலாகின்றது. மனித குலத்தின் அடிப்படை உண்மையாய், உயிர்த்துடிப்பாய் இருபது நூற்றாண்டுகள் கடந்தும் நம் அனைவருக்கும் சவாலாக அமைந்துள்ள ஒரு பதிலை இயேசு தருகிறார். அனைத்திலும் முதன்மையான கட்டளை எது? என்று கேட்டவரிடம் இயேசு, உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்புகூர்வாயாக என்பது முதன்மையான கட்டளை. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக என்பது இரண்டாவது கட்டளை.

கத்தோலிக்க சமயம் இரண்டு முக்கிய விடயங்களை கத்தோலிக்கர்க [illegible] முழு இதயத்தோடு இறைவனை அன்பு செய்வது, இரண்டாவது நம்மை நாம் நேசிப்பது போல அயலானை நேசிப்பது, அதற்கு இந்த இரண்டு விடயங்களும் வழிவகுக்கின்றன. இறைவனை நேசிப்பது என்பது எல்லோராலும் மேற்கொள்ளப்படும் விடயம்தான்.

எனினும் நாம் நம் அயலானை நேசிப்பதென்பது அதுவும் நம்மை நாம் நேசிப்பது போன்ற அயலானையும் நேசிப்பது என்பது நடைமுறையில் இல்லாத ஒன்று. இங்கு முதலில் நமக்குள் நாமே எழுப்பிக்கொள்ளும் கேள்வி நம் அயலான் என்பவன் யார்? என்பதுதான்.

இயேசுவின் காலத்திலிருந்து இன்று வரையிலும் உள்ள பெரிய பிரச்சினையே அயலான் அல்லது அடுத்திருப்பவர் யார் என்ற தெளிவு இல்லாததுதான். அருகில் இருப்பவன் எல்லாம் அயலான் அல்ல. ஆடை அணிகலன்களோடு விருந்து விழாக்களில் கூடி வருபவன் எல்லாம் அயலான் அல்ல. சட்டத்தையும் சம்பிரதாயத்தையும் கடைப்பிடித்தால் அயலானின் அன்பன் ஆகிவிட முடியாது. மனிதாபிமானம் இல்லாத மதமும் சாரமற்ற வழிபாடும் அயலானின் அன்பன் ஆக்க உதவாது. அடித்தள மனிதனின் ஆதங்கத்தை உணராமல் கோபத்தில் சிறகடிக்கும் மனிதனால் அயலானைக் காண கண்பார்வை போதாது.

எனவே என் அயலவர், அடுத்திருப்பவர் யார்? இன்றும் இந்தக் கேள்விக்குப் பதில் தேடி வருகிறோம். உலகில் 680 கோடிக்கும் அதிகமாய் மக்கள் இருந்தும் நமது அயலவரை அடுத்தவரை இன்னும் தேடிக் கொண்டு தானே இருக்கிறோம். இந்த உலகத்தைத் தாண்டி விண்வெளியைக் கடந்து வெண்ணிலவில் காலடி வைத்து விட்டுத் திரும்பிவிட்டோம். ஆனால் நம் வீட்டுக்கு அடுத்தவீட்டில் இன்னும் காலடி வைக்கத் தயங்குகிறோம் என்று நாம் வாழும் இந்தப் புதிரான காலத்தைப் பற்றி George Carlin என்னும் அறிஞர் கூறியுள்ளார்.



## ம.பிரான்சிஸ்க்
### கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

தேவையில் இருப்பவன் அயலான். சமூகம், பொருளாதாரத்தால் தாக்குண்டு தவிக்கும்மனிதன்ஒருஅயலான்.கொள்ளை, கொலை வன்முறையால் பாதிக்கப்பட்டவன் அயலான். அநீதியாலும் சாதீயத்தாலும் நசுக்கப்பட்ட மனிதன் ஒரு அயலான். தனிமையில் வாடுவோர், அநாதைகள், ஆதரவற்றோர் அனைவரும் அயலானே.

மேலும் அயலான் என்பவர் யார் என்பதை இயேசு நல்ல சமாரியன் உவமை மூலம் நமக்கு தெரியப்படுத்துகிறார். எதிரியாக இருந்தாலும் ஆபத்தில் உதவுபவன், உதவிக்காக காத்திருப்பவன் அயலான். இயேசு குறிப்பிடுகின்ற அயலானாக நாம் இருக்கின்றோமோ? அடுத்தவர் அன்பைப் பற்றி சமய உலகம் மட்டுமல்லாமல் கடவுள் நம்பிக்கையற்றவர்களும் இன்று பேசி வருகின்றனர். அயலானை இனம் காண்போம். அன்புச் செயல்கள் ஆற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆரம்பமாகிறது தேசியமட்ட கராத்தே



தேசிய மட்ட கராத்தேப் போட்டி இம்மாதம் நடுப் பகுதியில் கொழும்பில் நடைபெறும் என இலங்கை கராத்தே சம்மேளன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண போட்டிகள் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றிருந்த நிலையில் தேசிய மட்டப் போட்டிக்கு வடக்கு மாகாண கராத்தே வீரர்கள் தயாராகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டியில் அதிகளவிலான கராத்தே வீர, வீராங்கனைகள் பங்குகொள்ள வாய்ப்புள்ளதாகவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்னல்வேக கூடைப்பந்தாட்டம் பிற்போடப்பட்டுள்ளது


யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்தமாக இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடத்த இருந்த ஒருநாள் மின்னல்வேக கூடைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் திகதி பிற்போடப்பட்டுள்ளது. போட்டித் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளன்ர்.

## காலடன் கிண்ண கூடைப்பந்தாட்டம்

காலடன் விளையாட்டுக்கழகம் நடத்தும் காலடன் வெற்றிக்கிண்ணத்துக்கான 13 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தேசியமட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி என்பனவும் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை என்பனவும் கொழும்பு சென்றுள்ளன.

## தேசியமட்ட சதுரங்கப் போட்டி



இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்தும் தேசியமட்ட சதுரங்க குழுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுவதற்காக பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சதுரங்க அணி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சதுரங்க அணி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சதுரங்க அணி என்பன பங்குகொள்கின்றன.

இதேவேளை, திறந்த போட்டியில் ஜொலி ஸ்ரார் நைற் அணி, மகாஜனக் கல்லூரி சதுரங்க அணி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சதுரங்க கழக அணி ஆகியவை கலந்து கொள்ளவுள்ளன.

# கோட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியன்




தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகியுள்ளது.கடந்த சனிக்கிழமை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இவ் இறுதியாட்டம் நடைபெற்றது.

இப்போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.


மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் மகாஜனக் கல்லூரி முதல் பாதியாட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதியாட்டம் தொடர்ந்தபோது வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் சிறப்பாக ஆடி 2 ஆவது கோலினை அடித்து ஆட்டத்தினை சமன் செய்தது. இதன்மூலம் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பான கட்டத்தினை அடைந்தது.

ஆனரல், மிகவும் திறமையாக ஆடிய மகாஜனக் கல்லூரி அணி அடுத்தடுத்து 2 கோல்களினைப் போட்டது.

பதிலுக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் கடுமையான முயற்சியில் ஈடுபட்டாலும் இறுதிவரை கோல்கள் எதனையும் போடவில்லை. இறுதியில் 4:2 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றிபெற்று கோட்டமட்டச் சம்பியனை தனதாக்கிக் கொண்டது. மூன்றாம் இடத்தினை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெற்றுக்கெண்டது.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சமூகத்தினரால் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச நீச்சல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் செயற்குழுவும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண பழைய மாணவர்களும் இணைந்து எதிர்வரும் 22 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரகாலம் இலவச நீச்சல் பயிற்சி முகாமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் நடத்தவுள்ளதாக மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தெரிவித்துள்ளார்.

நீச்சலில் நிபுணத்துவம் வாய்ந்த ஐந்து பேர் கொண்ட குழுவினரால் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி முகாமிற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 36 பாடசாலைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் பயிற்சி முகாம் மூலம் தற்பாதுகாப்புப் பயிற்சியினை வழங்கவும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் நடத்தப்படவுள்ள நீச்சல் போட்டியில் பங்கு பற்றுவதற்காக மாணவர்களை தயார்ப்படுத்துவதற்காகவுமே வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று



இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் கிரிக்கெட் போட்டி இன்று நடை பெறவுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி ஒரேயொரு இருபது-20 போட்டி, 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது.

2-வது ஒருநாள் போட்டி பகலிரவு ஆட்டமாக 2.30 மணிக்கு பல்லேகல சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அணியும் ரோஸ் ரெய்லர் தலைமையிலான நியூசிலாந்து அணியும் மோதவுள்ளது.

இதேவேளை, இரு அணிகளுக்கிடையிலான இருபது-20 போட்டி மற்றும் முதலாவது ஒரு நாள் போட்டி ஆகியன மழை காரணமாக கைவிடப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

## வாள் வெட்டில் மூவர் காயம்

(மிருசுவில்)

குடும்பப்பிரச்சினை காரணமாக இடம் பெற்ற முரண்பாடு வாள் வெட்டில் முடிந்தது. இதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் அராலி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தினை சேர்ந்த எ.தீபன் (வயது32), எஸ்.விஜிதரன் (வயது 24), எஸ். பற்று (வயது44) என்பவர்களே படுகாயமடைந் தவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-85)

## அரசியல் மோசடிகளை...

ராஜபக்ஷ, பதின்மூன்று ப்ளஸ் என்று காண்பவர்களிடம் எல்லாம் சொல்லி வந்தார். அதன் பிறகு மாகாண சபை அதிகாரங்களைப் பறித்தெடுக்க பசில் ராஜபக்ஷ, திவிநெகும சட்டத்தின்மூலம் பதின்மூன்று மைனஸ் என்ற நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தினார்.

இன்று கோத்தபாய ராஜபக்ஷ, இந்த அதிகாரப்பகிர்வு எல்லாம் வேண்டாம் எதுவுமே வேண்டாம் என மாகாண சபைகளையே அகற்றி விடும் பதின்மூன்று பூஜ்யம் என்ற நிலைக்கு தமது அரசாங்கத்தை கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

இதுதான் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில், ப்ளஸ், மைனஸ் ஆகி கடைசியில் பூஜ்யம் ஆன கதை. யுத்தம் முடிந்த சில நாட்களில் இலங்கை வந்த ஐ.நா.செயலாளர் நாயகத்தில் ஆரம்பித்து, இந்தியப் பிரதமர் வரை பதின்மூன்றை விட அதிகமாக வழங்கப்போகின்றேன் என பலமுறை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சொல்லி வந்தார்.

பதின்மூன்று சரி, அந்த மேலதிகம் என்ன என நாம் கேட்கும் அளவுக்கு நிலைமை அன்று இருந்தது. இந்நிலையில்தான், பதின்மூன்று பெற்று வந்த எடுத்த செல்லப்பிள்ளையான மாகாண சபைகளின் அதிகாரங்களை படிப்படியாக இந்த அரசாங்கம் பிடுங்கி எடுக்கத் தொடங்கியது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஒரு அரசியல் மோசடியாகும். இதை அனுமதித்தால் இனிமேல் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை உலகின் ஒரு குட்டி நாடு கூட மதிக்காது என்பது இன்று சுவரில் எழுதப்பட்டுள்ள உண்மை ஆகிவிட்டது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் மீது அக்கறை இல்லாவிட்டாலும்கூட, சர்வதேசிய ரீதியாக தமது அதிகாரம் மற்றும் செல்வாக்கு வீழ்ச்சி அடைந்துவிடக்கூடாது என்ற அக்கறை இந்த நாடுகளுக்கு நிச்சயம் உண்டு.

இந்நிலையில் இலங்கை என்ற குட்டி நாடு, தங்களை நம்பவைத்து ஏமாற்றிவிட்டது என்ற செய்தி உலகில் தமது செல்வாக்கைச் சரியச் செய்யும் என்ற அச்சம் இன்று நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. அதை நாம் ஐ.நா.செயற்பாட்டில் இன்று பார்க்கிறோம். அடுத்த மார்ச் வரும்போது இதை இன்னும் அதிகம் பார்ப்போம் என குறிப்பிட்டார். (எ-11)

## சபாநாய...

இந்தச்சந்திப்பு விரைவில் இடம்பெறும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை, சபாநாயகருடனான சந்திப்பின்போது கலந்துரையாடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 7-ம் திகதி கூட்டப்படவுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது சில தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## பிரதம நீதியரசர்...

எதிரான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் இதுவரை வெளிப்படுத்த வில்லை. அந்தக் குற்றச்சாட்டுக்கள் என்னவென்று கேட்கப் பட்ட போதிலும், அதுபற்றி தற்போது தெரியப்படுத்த முடியாதென்று அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் அவருக்கெதிரான விசாரணைகளில் நம்பகத்தன்மையே கேள்விக்குள்ளாகியிருப்பதாக ஃப்ரீ மார்ச் அமைப்பின் செயலாளர் சட்டத்தரணி பண்டார ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, பதவி நீக்குவதற்கான கண்டனத் தீர்மானத்தை எதிர் நோக்கியுள்ள நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு விசாரணை முடியும் வரையில் வழக்கு விசாரணைகளில் ஈடுபட சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று ஊடகவியலாளர்கள், சட்டத்தரணி பண்டார ஏக்கநாயக்கவிடம் வினவினார்.

அதற்குப் பதிலளித்த சட்டத்தரணி பண்டார, வழக்கு விசாரணைகளில் ஈடுபடுவதற்கு தலைமை நீதியரசருக்கு இப்போதைக்கு சட்ட ரீதியாக பிரச்சினையில்லையென்று கூறினார்.

முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிராக பதவிநீக்கத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, அந்தவிசாரணைகள் நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்திலும் அவர் வழக்கு விசாரணைகளை நடத்தியதை ஃப்ரீ மார்ச் அமைப்பின் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானம் தொடர்பான விசாரணைகள் நடக்கும் போது, தலைமை நீதியரசரை நீதிமன்ற வழக்கு விசாரணைகளிலிருந்து ஒதுங்கியிருக்குமாறு தடையுத்தரவு பிறப்பிக்க நாடாளு மன்ற தெரிவுக்குழுவிற்கு எந்தவிதமான அதிகாரங்களும் இல்லையென்றும் அவர் கூறினார். (எ-11)

## அரசாங்கத்திடமிருந்...

வன்னி இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் மரணங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்று விளக்கமளிக்கப்படுவதே பொறுப்புக்கூறுதல் என்பதன் அர்த்தம் எனவும் அது தொடர்பில் இன்னமும் சரியாக விளக்கமளிக்கப்படவில்லை.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில், ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள சாள்ஸ் பெற்றியின் அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். அதேநேரம் தானும் நிபுணர் குழுவில் இரு உறுப்பினர்களும் இந்த அறிக்கையை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் எனவும் தருஸ்மன் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை வன்னி இறுதிக்கட்டப் போரில் பலியானவர்களின் எண்ணிக்கை குறித்து அரசு முரண்பாடான கருத்தை தெரிவித்துவரும் நிலையில் இவ்வாறு தருஸ்மன் அறிக்கையை உடனடியாக கோரியுள்ளமை இலங்கை அரசுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

## மனிதவுரிமை...

கூடிய வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பரிந்துரைகளை அமுல்படுத்தல் தொடர்பில் தற்போதைய சட்டத்தில் போதியளவு அதிகாரங்கள் கிடையாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் நீதவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர் ஒருவர் பரிந்துரைகளைஅமுல்படுத்தாவிட்டால் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் உரிமையே தற்போதைய சட்டத்தில் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தச் சட்ட அதிகாரம் போதுமானதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்தாத அரசாங்க அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் நீதவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார். (எ-11)

## திவிநெகுமவை சட்ட...

ஆளுநர் இந்த சட்ட மூலத்துக்கு ஒப்புதலளிக்க முடியுமா? என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு இப்போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் நாடாளுமன்றத்தில் நவம்பர் 6-ம் திகதி அறிவிக்கப்படும்.

சில சமயம் இந்தச் சட்டமூலத்துக்கான மக்களின் ஒப் புதலை ஓர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பெறவேண்டிய தேவையும் எழலாம். நாம் அதற்கும் தயாராகவுள்ளோம். நாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து இந்தச் சட்டமூலத்தை உரிய முறையில் சட்டமாக்குவோம்.

வீட்டுத்துறை பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்து நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம் மூலம் மக்களை வறுமையிலிருந்து மீட்பதே திவிநெகும இயக்கத்தின் நோக்கம் என்றார். (எ-11)

## கரும் காற்றுட...

இதேவேளை, வெள்ளப்பெருக்கு, ஆறு பெருக்கெடுத்தல் நிலைமைகள் தற்போது கிரமமாக குறைந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதனால், இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவருகின்றனர்.

அதிக மழை காரணமாக நேற்று முன்தினம் வரை இரண்டு லட்சத்து 21 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்திருந்தனர். அதில் பெருமளமானவர்கள் தமது சொந்த பகுதிகளுக்கு திரும்பியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

களனி, நில்வளா, கிங்கங்கை மற்றும் களுகங்கை உள்ளிட்ட ஆறுகளின் நீர்மட்டங்களும் படிப்படியாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## கடத்தப்பட்டவர்...

பிரதேசத்தில் இனந்தெரியாத சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச்சடலமானது அண்மையில் கொழும்பு செட்டியார் தெருவில் காணாமல்போன சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்பவரது சடலம் என தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபரின் சடலம் நுவரெலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும், அதனை செல்வம் அடைக்கலநாதன் அடையாளம் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலமாக மீட்கப்பட்ட 53 வயதான இந்திரேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் சகோதரியின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 30ஆம் திகதி இந்திரேஸ்வரன் காணாமல் போயுள்ளார். 31ஆம் திகதி நானுஓயா பிரதேசத்தில் இனந்தெரியாத சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்திரேஸ்வரன் நகை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் எனவும், காணாமல் போன சந்தர்ப்பத்தில் சுமார் 30 இலட்ச ரூபாய் பணம் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போன 30ஆம் திகதி இரவு 7 மணி வரையில் இந்திரேஸ்வரனின் செல்லிடபேசி இயங்கியதாகவும் அதன் பின்னர் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் சின்னத்துறை இந்திரேஸ்வரன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டைப் பகுதியில் வைத்து சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஸாந்த ஜயகொடி தெரிவித்தார். சின்னத்துரை இந்திரேஸ்வரன் நகை வியாபாரத்திற்காக 30 இலட்சம் ரூபாயுடன் சந்தேக நபரோடு சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பணத்தை நோக்கமாகக் கொண்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ-11)

## 13ஆவது திருத்தச்சட...

இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு 13-வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டுமென ஒரு தரப்பு கூறி வருகின்றது.

அதேநேரம் மற்றுமொரு தரப்பு அதற்கு முரண்பாடான கருத்தை வெளியிட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் 13-வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

அதேவேளை வட மாகாண சபைத் தேர்தலை 2013-ம் ஆண்டு நடத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என்றார் சல்மான் குர்ஷித். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடு கடத்தியவர்களின் வேலை பறிப்பு

மாட்டினை கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முடியும் வரை தற்காலிகமாக அவர்களை பணி நீக்கம் செய்துள்ளதாக தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசசபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தில் கிழக்கு அரியாலை பகுதியிலிருந்து மாடு ஒன்றினையும் அதன் கன்றினையும் ஏற்றிக் கொண்டு வரும் போதே பொதுமக்களினால் குறித்த ஊழியர்கள் பிடிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த முதலாம் திகதி மாலை 5 மணியளவில் இந்த குறித்த சபை ஊழியர்கள் மூவர் பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-6)


**வேலையாட்கள் தேவை**

Selva Tele Communication
124, Temple Road,
Jaffna.

மேற்படி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-0777286050 (882)

**4 நாட்களில் கணனித்துறையில் வல்லுனர் ஆகலாம்**

Computer Hardware Engineering
அனைத்து சகல விதமான கணனிகளையும் திருத்துதல்.
கணனி ஒன்று சேர்த்தல். (Assemble)
கணனி மென்பொருள்.
கணனியில் வரும் அனைத்து பெயர்களையும் கண்டறிதல்.
மல்ரி மீடியா தொடர்பான பூரண அறிவு.
சுயமாக கணனியைப் பொருத்துதல்.
பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி நல்லூர்.
T.P. : 021 222 4728,
0777444225
e mail : info@iiseees.lk
(C-1437)

**பழைய பட்டுப்புடவை பணமாகிறது!**
**ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்**

# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம் T.C.T வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

தொ.பே:-0752145355

5 தினங்கள் மட்டுமே!

**04.11.2012 முதல் 08.11.2012 வரை**



பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள், பழைய கிழிந்த கூறைப் புடவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/- க்கு மேல் ரூபா 20000/- வரை வழங்கப்படும்

பழைய காலத்து கல்வைத்த நகைகள், லால்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

குறிப்பு :- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

வேலை நேரம் காலை 9.30 மணிமுதல் இரவு 6.30 மணிவரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

GlaxoSmithKline

சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலி கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.

இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது.



உலகெங்கிலும் பல்மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்படுவது




பற்களில் எனாமல் கீழே உள்ள மென்மையான பகுதியாகிய டென்ரின் வெளிப்படுவதால் பற்களில் கூர்உணர்ச்சி தோற்றுவிக்கின்றது. சென்சொடைன் பற்களின் அடிப்பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இருதடவைகள் பல்துலக்குவதால் கூர் உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

*50 கிராம் – ரூபாய் 220 100 கிராம் – ரூபாய் 420*

தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இரு தடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.